பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 13 சனிக்கிழமை (29.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 276

'சனல் 4' வீடியோ காட்சி தொடர்பாக

# இலங்கை மீது யுத்தக் குற்ற வழக்கு; எரிக் சொல்ஹெய்மும் வலியுறுத்து

## ஐ.நா. செயலரிடம் நேரடியாக முறையிடுவார்



ஒஸ்லோ, ஓகஸ்ட் 29

இலங்கை இராணுவத்தினர் இளைஞர்கள் சிலரை நிர்வாணப்படுத்தி சுட்டுக் கொல்கின்றமையைக் காட்டும் வீடியோ காட்சியை பிரிட்டனின் 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்டதைத் தொடர்ந்து, இந்த விடயத்தில் இலங்கை அரசு மீது சர்வதேச யுத்தக்குற்ற விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கையின் முன்னாள் சமாதானத் தூதருமான எரிக்சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நோர்வேக்கு விஜயம் செய்யவிருக்கும் ஐ.நா. செயலர் பான் கீ மூனிடமும் இது தொடர்பாகத் தாம் வலியுறுத்தப் போகிறார் எனவும் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவைச் சித்திரித்து 90 கோடி ரூபா செலவில் திரைப்படம்

கொழும்பு, ஓக. 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் வெற்றிகளைச் சித்திரிக்கும் வகையில் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க அரச தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆரியரட்ண ஆதுகல ஏற்பாடு செய்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு முன்னோடியாக இரண்டாம் இராஜசிங்க மன்னனை ஒத்த கதாபாத்திரத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சங்குப்பிட்டியில் 288 மீற்றர் நீளத்துக்கு பாலம் அமைப்பதற்கு பிரிட்டிஷ் உதவி

### தூதுவர் பீற்றர் ஹைஸ் இடத்தை நேரில் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஓக.29

குடாநாட்டையும் நாட்டின் ஏனைய பிரதேசங்களையும் இணைக்கும் விதத்தில் சங்குப்பிட்டியில் 288 மீற்றர் நீளமான பாலத்தை நிர்மாணித்து உதவுவதற்கு பிரிட்டன் முன்வந்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரிட்டிஷ் தூதர் கலாநிதி பீற்றர் ஹைஸ் புதிய பாலம் அமைக்கப்பட இருக்கும் மகாதேவா தாம்போதிப்பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார். வடக்கில் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவுடன் அவர் சங்குப்பிட்டியை பார்வையிட்டுச் சென்றார்.

ஏ-32 வீதியில் அமைந்துள்ள மகாதேவா தாம்போதிக்கு மேலாகப் புதிய பாலம் நிர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாண சபைக்கு ஒக். 10ஆம் திகதி தேர்தல்

கொழும்பு, ஓக. 29

தென் மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

அதேவேளை, தென் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

நேற்று நண்பகல் வரை 16 அரசியல் கட்சிகளும் 13 சுயேச்சை குழுக்களும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## மேல்நீதிமன்றக் கட்டடம் உடைந்தது நேற்றைய செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஓக. 29

கொழும்பு மேல்நீதிமன்ற கட்டடத்தின் ஒரு பகுதி நேற்றுமுன்தினம் இரவு உடைந்து வீழ்த்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் நீதிமன்றில் நான்காம், ஐந்தாம், ஆறாம் மன்றுகளுக்கு முன்னாலுள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

## நீண்ட காலம் தடுத்து வைக்கப்படும் அரசியல் கைதிகளை விடுவிப்பது குறித்து திட்டம் வகுக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 29

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக கொள்கைத்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென்று சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா தலைமையில் சக நீதியரசர்களான நிஹால் காமினி அமரதுங்க, சந்திரா எக்கநாயக்க ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயமே தமிழ் அரசியற் கைதி ஒருவரின் அடிப்படை உரிமைமீறல் மனு (16 ஆம் பக்கம் பார்க்க)

## 'சனல் - 4' வீடியோவை வழங்கியது ஜேர்மனிலுள்ள சிங்களப் புலிகளே

### 'திவயின' பத்திரிகை செய்தி

கொழும்பு, ஓக. 29

இலங்கை இராணுவத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான வீடியோக்களை ஜேர்மனியில் உள்ள சிங்கள விடுதலைப்புலி உறுப்பினர்களே விநியோகம் செய்துள்ளனர் என 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தினர் தமிழர்களை படுகொலை செய்வது போலச் சித்திரிக்கும் போலி (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலா? அது வேண்டாம் என்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா!



கொழும்பு, ஓக. 29

தான் எந்தச் சூழ்நிலையிலும் ஒரு போதும் அரசியலில் ஈடுபடமாட்டார் என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"நான் ஒரு இராணுவ வீரன், அரசியல்வாதி அல்லன். நான் இராணுவக் கடமையிலிருந்து ஓய்வுபெற்ற பிற்பாடு ஒரு சாதாரண இலங்கைப் பிரஜையாக மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறேன். இராணுவத்தில் இருந்த காரணத்தால் வாழ்க்கையில் இழந்த சந்தோஷமான காலங்களை மீண்டும்பெற் றுக்கொள்ள விரும்புகிறேன்" (16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல்தீர்வை முன்வைத்தால் மட்டுமே அபிவிருத்திப் பணிகள் முழுமை பெறும்

## யாழ்.வந்த பிரிட்டிஷ் ராஜதந்திரி லியம்போக்ஸிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக 29

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் மட்டுமே அபிவிருத்திப் பணிகள் முழுமை பெறும்.

பிரிட்டிஷ் கன்சவேட்டிப் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நிழல் வெளிவிவகார அமைச்சருமான லியம்பொக்ஸிடம் சாமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு மேற்கண்டவாறு எடுத் துக் கூறியுள்ளது.



நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பிலே சமாதானத்துக்கும் நல்லெண் ணத்துக்குமான குழுவினர் அமைச்சர் லியம் பொக்ஸிடம் எடுத்துக் கூறியுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:

* வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளன. பருவமழை ஆரம்பிக்க முன்னர் அவர்கள் மீளக் குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

* யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் பாதுகாப்பு அனுமதி பெறும் முறை நீக்கப்பட வேண்டும்.

* 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பிரதேச மக்கள் மீளக் குடியேற்றம் செய்யப்பட வேண்டும். அங்குள்ள விவசாய நிலங்களில் பயிர்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

* இலங்கை அரசமைப்பில் தமிழ்மொழி அரச மொழியாகவுள்ள போதும், அந்த நடைமுறை 30 வருடங்களாக அமுல் படுத்தப்படாமல் உள்ளது. எனவே உடனே அந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

* யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்று அமைக்க பிரிட்டன் உதவி புரிய வேண்டும்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் அதற்காக முன் வைக்கப்பட வேண்டிய தீர்வுகளும் உள்ளடங்கிய மகஜர் ஒன்றினையும் அந்தக் குழுவினர் பிரிட்டிஷ் அமைச்சரிடம் கையளித்தனர்.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து 3 மணியளவில் யாழ். செயலகத்திற்குச்சென்ற பிரிட்டிஷ் அமைச்சர் லியம் பொக்ஸ் அங்கு யாழ் மாவட்ட அரச அதிபர் கே. கணேஷை சந்தித்து யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்ந்தார்.

## அபிவிருத்தி நிதிக்காக நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக 29

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச்சங்க அபிவிருத்தி நிதிக்காக நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. முதலாம் பரிசை - 1950 என்னும் இலக்கச் சீட்டுடையவரும் இரண்டாம் பரிசை - 3811 என்னும் இலக்க சீட்டுடையவரும் மூன்றாம் பரிசை - 0304 என்னும் இலக்கச் சீட்டுடையவரும் பெற்றுக்கொண்டனர். (203)

## செயலமர்வு

வடமராட்சி, ஒக 29

வடமராட்சிக் கல்விவலயம் விடுமுறை காலத்தில் ஆசிரியர்களுக்கென நடத்திவரும் செயலமர்வுகள் வரிசையில் இன்று சனிக்கிழமை பட்டதாரி 'ஆசிரியர்களுக்கான ஆரம்பக்கல்வி கற்பித்தல்' முறைமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (203-236)

## இந்துமதகுருமார்கள் சார்பான நன்றிகளும் நல் ஆசிகளும்

எமது அமைப்பின் அன்பான வேண்டுதலை ஏற்று உடனடியாக வவுனியா நலன்புரி முகாமில் இருந்த அனைத்து மதகுருமார்களையும் விடுவித்தமைக்காக மாண்புமிகு ஜனாதிபதி அவர்கட்கும் வடக்கின் வசந்தம் செயலணித் தலைவர் பசில்ராஜபக்ஷ், குருமார்கள் சார்பில் முன்னின்று அர்ப்பணிப்புடன் செயலாற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது அமைப்பின் கொழும்பு ஆலோசகர் பிரம்மஸ்ரீ. இராமச்சந்திரபாபுசர்மா, யாழ்.மாவட்ட அரச அதிபர் சமூக சேவைகள் திணைக்கள உதவியாளர்கள் அனைவருக்கும் இந்துமதகுருமார்கள் சார்பான நன்றிகளையும் நல் ஆசிகளையும் இந்துகுருமார் ஒன்றியத்தினர் தெரிவித்து கொள்கிறார்கள்.

நன்றி

## ஆற்றுப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக 29

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 'தன்னம்பிக்கை' என்னும் தலைப்பிலான ஆற்றுப்படுத்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை பரமானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆற்றுப்படுத்தல் ஆலோசனைகளை துறைசார் ஆலோசகர் வண.பிதா டேமியன் அடிகளார் வழங்குவார். சிறுவர்கள், முதியோர்களுக்கான ஆற்றுப்படுத்தல் ஆலோசனைகள் இந்நிகழ்வில் இடம்பெறும். இதேவேளை சிக்கனமான போசாக்கு உணவு பற்றிய விரிவுரையும் செயன்முறை விளக்கமும் இடம்பெறவுள்ளன. (201)

## சங்கானை வெல்வில் முருகனுக்கு மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக.29

சங்கானை, இலுப்பைத்தாழ்வு, வெல்வில் சிவசுப்பிரமணிய கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஜீர்னோத்தாரண உத்தம நவகுண்டலபட்க்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இக் கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நாளை காலை 7.25 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பக்தர்களின் எண்ணைக்காப்பு சாத்துதல் இடம்பெறும். (1)

## சட்டமாணி கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஒக 29

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் சட்டமாணிப்பட்ட கற்கை நெறி மட்டம் 3 மற்றும் மட்டம் 4 க்கான நாள் பாடசாலை இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## நீர்வேலியில் நாளை மழலைகள் குதூகலவிழா

யாழ்ப்பாணம், ஒக.29

வலி.வடக்குப் பிரதேச முன்பள்ளி மழலைகளின் குதூகலபெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உள்ளூராட்சி உதவி [illegible] (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குணமணி சின்னத்தம்பி



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி சின்னத்தம்பி நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்- அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகர்-தெய்வானை தம்பதியரின் மருமகளும் அனுசுயா (பிரான்ஸ்), சுகன்யா ஆகியோரின் பாசமிகு தாயும், குலேந்திரன் (பிரான்ஸ்), ஜெயபாஸ்கரதாஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியும் கீர்த்திகாவின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசமலர் மற்றும் நேசமணி, மகேஸ்வரி, தனபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பொதிகை இல்லம்'
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
சி.சுகன்யா (மகள்)

### சுந்தரலிங்கம் பாக்கியலக்சுமி



பூனாறிலேன், கொக்குவில் மேற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சு.பாக்கியலக்சுமி நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், பிரபாகரன் (பிரான்ஸ்), சுதாகரன், தயாகரன் (பிரான்ஸ்) நிசாந்தினி (நோர்வே), உஷாநந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி (பிரான்ஸ்), உதயகுமாரி, சுபாஜினி (பிரான்ஸ்) முரளிதரன் (நோர்வே), சசீந்திரன் ஆகியோரின் மாமியாரும், அபிஷேக், அக்ஷயா, செந்தூரன், மணிகண்டன், ஆதவன் (பிரான்ஸ்), சேரனுயன், கயல்விழி, திலகஜன், இனோஸ் (பிரான்ஸ்), ஆகாஸ் (பிரான்ஸ்), அபிநயா (பிரான்ஸ்), மயூரி, காசினி (நேர்வே) ஆகியோரின் பேர்த்தியும் சைலாசபிள்ளை (அமரர்), ஆனந்தராசா (அமரர்), பரமேஸ்வரி, அன்னராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூனேறி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

தகவல்; சுதாகரன் (மகன்) 0776089124

## மரண அறிவித்தல்கள்

### கருணாதேவன் றஜீவன்

(பழைய மாணவன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு - வணிக முதற்தேர்வு - யாழ்.பல்கலைக்கழகம்)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கருணாதேவன் றஜீவன் நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கருணாதேவன் - சிவபாக் கியத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற கஜந்தன் மற்றும் சுஜீவன் (சுவிஸ்), சுஜிந்தா, றஜிந்தா, அஜிந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லர் - சின்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அருமைப்பேரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இந்திராதேவி, சவுந்தரதேவன், தவமலர், மகேந்திரநாதன் (சுவிஸ்), கல்யாணி, புஸ்பவதி (சுவிஸ்), இராசலிங்கம், யோகேஸ்வரி, ஸ்ரீதேவன், கௌசலா, குலசிங்கம் இராஜேஸ்வரி (சுவிஸ்), யோகச்சந்திரன் மரியா (சுவிஸ்), ரவிச்சந்திரன் சாந்தினி, சிவசம்பு புனிதவதி, செல்வரத் தினம் (கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), புஸ்பலதா, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் புஸ்பரதி, செல்வரத்தினம் புஸ்பராணி, ரகுராம் (வைத்தியர், அக்கு பங்சர்), புஸ்பரூபி (பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோ ரின் அன்புப் பெறாமகனும், ஸ்ரீதரன் (அதிபர், யா/ஊரி அ.மி.த.க. பாடசாலை, காரைநகர்) காந் தினிதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காந்தாளன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுஜி ஸ்ரோர்ஸ்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

### கந்தையா பாக்கியம்

காரைநகர், ஆயிலியைச் சேர்ந்த கந்தையா பாக்கியம் நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தர் கந்தையாவின் அன்பு மனைவியும், சத்தியாம்பாள், பரமேஸ்வரி (கனடா), சிவகுமார் (தேசிய சேமிப்பு வங்கி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிறீஸ்கந்தராஜா (கனடா), மோகனாம்பாள் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகரன், சிறீகரன் (ஆசிரியர்), ரதீஸ்குமார் (கனடா), பிரியா (கனடா), மிருந்தா (கனடா), பிரதீபன் (கனடா) சிவானுஜன், சுகன்ஜா, சியாமளா, மங்கள நாயகி, பத்மசிலோசனா, நந்தினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்ப லோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலி,
காரைநகர்.

தகவல்
க.சிவகுமார் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தென்மாகாண சபைத் தேர்தல் களம்....

அரசமைப்புச் சட்டத்துக்கான 17 ஆவது சட்டத் திருத்தம் குறித்து தெற்கில் இப்போது அதிக அளவில் பேசப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும் குறிப்பிட்ட சட்டத் திருத்தம் குறித்து பகிரங்கமாகச் சர்ச்சை புரியத் தொடங்கிவிட்டன. மிகக் குறிப்பாக, தென்மாகாண சபைத் தேர்தலை,முன்னிட்டு அந்தத் திருத்தச் சட்டம் குறித்து வாதப் பிரதிவாதங்கள் பெரிய அளவில் கிளம்பியுள்ளன.

அதற்குக் காரணமும் உண்டு. தென்மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலும் நடத்தப்படும் என்பது வெறும் ஊகங்களாக மட்டுமின்றி, நிச்சயமானவை என்ற நிலையாகிவிட்டது.

இந்தப் பின்னணியிலேயே, இயன்றால் 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதன் பின்னர் தென்மாகாண சபைத் தேர்தலையும் ஏனைய உத்தேச இரண்டு தேர்தல்களையும் நடத்தி வென்று காட்டமுடியுமா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு பெரிய சவால் ஒன்றை விடுத்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி, தெற்கின் மற்றொரு பிரதான கட்சியான ஜே.வி.பி யும் அரசுடன் முண்டு பிடிக்கத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதித்தேர்தலை முன்னிட்டு தமது கட்சியோடு செய்து கொள்ளப்பட்ட 2,000 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், ஜனாதிபதி முறையை ஒழிக்காமல் மற்றொரு ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடாது என்று நடுக்கம்பு போட்டு வருகிறது அந்தக் கட்சி. அதுவும் அரசாங்கத்துக்கு மிகக் குறிப்பாக ஜனாதிபதி மஹிந்தவுக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலே.

இரண்டு தரப்புக்களின் சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய-பதில் கூறவேண்டிய - தேவை அரசாங்கத்துக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. தென்மாகாண சபைத் தேர்தல் நடைபெறப்போவதால் இரண்டு சவால்களையும் அரசு எதிர்கொள்ள வேண்டிய தேவை உருவாகியுள் ளது. அவற்றைக் கருத்திற்கொண்டு, ஏதேதோ காரண காரியங்களை சொல்லித் தான் ஆக வேண்டும் என்ற சங்கடமான நிலை அரசுக்கு.

அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி க்கும்) பதிலளிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட விடயத்துக்கு 'டிமிக்கி' கொடுக்கும் கெட்டித்தனத்துடன், ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் பிரியதர்ஷன யாப்பா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் எதிர்கொள்ளப்போகும் தோல்வியை மறைப்பதற்காகவே எதிர்க் கட்சிகள் முறையே அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், 2005 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் அலட்டிக் கொள்கின்றன என்ற சாரப்பட அவர் கூறியுள்ளார். அதாவது இந்த விவாதத்தில் இருந்து நழுவும் விதத்தில் அமைச்சரின் பதில் அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கேள்விக்கு நேரடியான, உருப்படியான காரணம் எதனையும் முன்வைக்காமல் - விவகாரத்தை பூசி மெழுகும் விதத்தில் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப, அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

இது விதண்டாவாதம் என்பது மட்டுமின்றி,கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போகிறேன் என்று கூறியதற்கு ஒப்பானது. பருவத்தே பயிர் செய்யாது அதனை தவறவிட்டு நட்டம் அடைபவனின் நிலைப்பாடு என்றும் இதனைக் கூறலாம்.

17 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் பிரகாரம், சுயாதீனமான, சுதந்திரமான தேர்தல்களை நடத்தவேண்டும். பொலிஸ் மற்றும் அரசாங்கச் சேவை (பொதுச் சேவை) மற்றும் நீதிச் சேவை செயற்பாடுகளின் மூலமே மக்களின் உரிமைகளை நிலைநாட்டமுடியும் என்ற கருப்பொருளைக் கடந்து, புறந்தள்ளிவிட்டு, கலரிக்குக் கதை விடுவது போல அமைச்சர்,அநுரா விவாதம் செய்கிறார்.

அவை குறித்து தமது தரப்புக்கு அச்சம் இல்லையெனில், தென்மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னராவது அவற்றை நடைமுறைப்படுத்துவோம் என்று அமைச்சர் கூறியிருக்கலாம்.

அவ்வாறு கூறி அகப்பட்டுக்கொண்டால் மீண்டும் ஆளும்தரப்பில் அமரும் சந்தர்ப்பமும் இல்லாமல் போய்விடும் என்று நினைத்தாரோ என்னவோ...!

மேலும், பொல்லைக் கொடுத்து ஏன் அடிவாங்க வேண்டும் என்ற நினைப்புடன் அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு வகைசெய்யும்

* தேசிய பொலிஸ் ஆணைக்குழு
* தேர்தல் ஆணைக்குழு
* நீதிச் சேவை ஆணைக்குழு
* பொதுச் சேவை ஆணைக்குழு என்பவற்றை நிறுவி செயற்படுத்துவதால் மக்களுக்கு உண்டாகக்கூடிய நன்மைகளை புறந்தள்ளிவிட்டு, தமது அரசியல் இருப்பை நிரந்தரமாக்குவதற்கான தந்திரமான பதில் தந்திருக்கின்றார் அமைச்சர்.

அரசியல் அதிகாரம் தம்மிடமும் தமது கட்சியிடமும் இருந்து கைநழுவிப் போகக்கூடாது என்ற ஒரே வழிச் சிந்தனை அரசியல்வாதிகளிடம் இருந்து நீங்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?

மொத்தத்தில் இந்த இலங்கைத் தீவில்... 1980 ஆம் ஆண்டில் - இற்றைக்கு 29 ஆண்டுகளுக்கு முன்னர்- இயற்றப்பட்ட 17 ஆவது சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளும் காலத்தைக் கடத்தி மக்களை ஏமாற்றி வருகின்றன என்பதனை இங்கு அழுத்தமாக குறிப்பிடுவது அவசியம்.

# யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 2,543 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலிருந்து விரைவில் விடுவிக்கப்படுவர்

### இவர்களை அடையாளம் காணும் பணிகள் நிறைவடைந்துள்ளன

யாழ்ப்பாணம், ஓக 29

வவுனியா, மன்னார் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 543 குடும்பங்கள் விரைவில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்கள் தொடர்பான விவரங்களை அடையாளம் காணும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள யாழ்.மாவட்ட மக்களில் 2 ஆயிரத்து 211 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 437 பேரின் விவரங்கள் பிரதேச செயலர்களினால் அடையாளம் காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மன்னார் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ்.மாவட்ட மக்களில் 332 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 248 பேரின் விவரங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களின் விவரங்கள் பொலிஸ் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்ததும் இவர்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட 15 ஆயிரத்து 167 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 974 பேரின் விவரங்கள் யாழ்.செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்களின் விவரங்களை உறுதிப்படுத்துவதற்காக அந்தப் பட்டியல்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசசெயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதில் முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்ட 2 ஆயிரத்து 211 குடும்பங்களே விரைவில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன. ஏனையோரை அடையாளம் காணும் பணிகள் தற்போது நடை பெற்று வருகின்றன - என்றார்.

# 'நிஷா' புயல், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 400 விவசாயிகளுக்கு இலவச விதை நெல்

### அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.29

கடந்த ஆண்டு இடம்பெற்ற 'நிஷா' புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 400 விவசாயிகளுக்கு இலவச விதைநெல் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியினை 'கமநெகும' திட்டத்தின் கீழ் யாழ்.அரச அதிபர் வழங்கியுள்ளார் எனவும் விதை நெல் வழங்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் எனவும் யாழ்.மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 'நிஷா' புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் கடந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கையில் ஆயிரத்து 288 ஏக்கர் நெல் முற்றாக அழிவடைந்தது. நெல் முற்றாக அழிவடைந்த ஆயிரத்து 450 விவசாயிகளுக்கு 2 ஆயிரத்து 371 புசல் விதைநெல் தற்போது இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான விதைநெல் விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2 ஆயிரத்து 950 விவசாயிகளின் பெரும்போக நெற்செய்கை பகுதியாக அழிவடைந்துள்ளது. இதன் மொத்த மதிப்பீடு 3 ஆயிரத்து 535 ஏக்கர் என அள விடப்பட்டுள்ளது. பகுதியாக நெல் அழிவடைந்த விவசாயிகளுக்கு 7 ஆயிரத்து 70 புசல் விதைநெல் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான விதை நெல் விநியோகம் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலவச விதை நெல்லை வழங்குவதற்கான நிதி 'கமநெகும' திட்டத்தின் கீழ் யாழ்.அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (50)

# குடாநாட்டில் உள்ள சிறிய நீர்ப்பாசன வீதிகள் 26.9 மில்லியன் ரூபா செலவில் விரைவில் புனரமைப்பு

### வடக்கின் வசந்தம் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஓக.29

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கமநல சேவைத் திணைக்களத்தின் வசமுள்ள, சிறிய நீர்ப்பாசன வீதிகளை 26.9 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்.பொது நூலகத்தில் வடக்கின் மீள் குடியமர்வு, அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இதற்கான இணக்கம் எட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்வதற்கு வசதியாக சிறிய நீர்ப்பாசன வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது. இதனையடுத்து சிறிய நீர்ப்பாசன வீதிகளை புனரமைப்புச்செய்ய கமநல சேவைகள் திணைக்களத்துக்கு 26.9 மில்லியன் ரூபாவை வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் 2 ஆம் கட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அந்த திட்டங்களுக்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதும் அதற்கான நிதியை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் திருப்தியளிக்கும் வகையில் உள்ளதாக ஜனாதிபதி செயலணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அபிவிருத்திப் பணிகளில் அதிகளவு முன்னேற்றம் காணப்படுவதாகவும், எஞ்சிய பணிகளையும் விரைவில் செய்து முடிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (50)

### யாழ்.மாநகர சபையின் தீயணைக்கும் இயந்திரம் செயலிழந்துள்ளது

யாழ். மாநகர சபையில் உள்ள தீ அணைப்புப் பிரிவின் தீயணைக்கும் இயந்திரம் செயலிழந்துள்ளமையால் அடுத்த சில தினங்களுக்கு அதன் சேவை இடம்பெறாது என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

இயந்திரம் திருத்தியமைக்கப்பட்டதும் அதன் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் மதிப்பீடு திங்களன்று ஆரம்பம்

அச்சுவேலி, ஓக.29

யாழ்ப்பாணத்தில் ஜீ.சீ.ஈ. உயர் தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையே ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம பரீட்சகர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயல் அமர்வுகள் கொழும்பில் முடிவடைந்து அவர்கள் யாழ்ப்பாணம் திரும்புவதில் உள்ள காலதாமதத்தை அடுத்தே ஒருநாள் தாமதமாக யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பமாகின்றன.

நாடளாவிய ரீதியில் விடைத்தாள், மதிப்பீட்டுப்பணிகள் நாளை ஞாயிற்றுக்கிழமையே ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. (50- 11)

# தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக்கிளை எதிர்வரும் நவம்பரில் திறந்து வைக்கப்படும்

அச்சுவேலி,ஓக.29

தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளையின் செயற்பாடுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகின்றன.

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் வங்கியின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வங்கிக்கான கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும் ஏனைய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பதால் எதிர்வரும் நவம்பர் மாதம் அச்சுவேலிக் கிளை திறந்து வைக்கப்படும் என தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கியின் நெல்லியடிக் கிளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து செயற்படவுள்ளது. இந்த வங்கியின் செயற்பாடுகள் ஊர்காவற்றுறையிலும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் சங்கானை மற்றும் கொடிகாமம் பகுதிக்கும் வங்கியின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-11)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி 14 | 30.08.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.ப.12.44வரை |
| நட்சத்திரம்: | மூலம் |
| | பி.ப. 02.07வரை |
| சுபநேரம்: | 09- 05.10.35 |
| ராகுகாலம்: | 04.35 - 06.05 |

### யாழ்.இளைஞர் கொழும்பில் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

அச்சுவேலி, தம்பாளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பில் வெள்ளை வானில் வந்த இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக அவரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

த.ரவீந்திரன் (வயது 32) என்ற இளைஞரே வெள்ளை வானில் கடத்தப்பட்டதாக அவரது தாயாரான தம்பிப்பிள்ளை ஆச்சியம்மா முறைப்பாடு செய்துள்ளார்.

சென்ரல் வீதி அமைந்துள்ள உப்புள் லொட்ஜில் தங்கியிருந்த இவர் கைத்தொலைபேசிக்கான மீள் நிரப்பும் அட்டை ஒன்றை வாங்குவதற்காக வெளியில் சென்ற வேளையில் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

பிரபல ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு

1. MIG வெல்டிங்
2. வெல்டிங்
3. அலுமினிய பொருத்துனர்
4. தச்சுதொழில்

போன்ற வேலைகளை செய்யக்கூடிய வேலை ஆள்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் 10.09.2009ஆம் திகதிக்கு முன்னராக விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

விளம்பர இல- 3932 C/O உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

**Diploma in Graphic Designing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

**Diploma in Hardware Engineering**
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

**Diploma in Video Editing**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir

Free Study Pack & CD'S — ஆ.கியவற்றினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 31/08/2009 9AM


## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்
### வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம் 180 நாள்கள் துரித அபிவிருத்தித்திட்டம் - 2009

மேற்படி திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வீதி வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | வேலையின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படும் பிணைப்பணம் (VAT, NBT வரி நீங்கலாக) | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | VAT (12%) | NBT (3%) |
|---|---|---|---|---|---|---|
| 01 | சின்னக்கிணற்றடி வீதி - அரியாலை (கல்லிட்டுத் தாரிடல்) | M 09/C 10 | 10,000/= | 1,000/= | 120/= | 30/= |
| 02 | மூத்த விநாயகர் வீதி 1ஆம் ஒழுங்கையும் உப ஒழுங்கையும் நாயன்மார்கட்டு இணைப்பு வீதியும் (கல்லிட்டுத் தாரிடல்) | M 08/C 09 | 26,000/= | 1,500/= | 180/= | 45/= |
| 03 | பிராமணக்கட்டுக்குள வீதி - நல்லூர் (கல்லிட்டுத் தாரிடல்) | M 08/C 09 | 25,000/= | 2,000/= | 240/= | 60/= |
| 04 | வண்ணான்குள வீதி - திருநெல்வேலி (கல்லிட்டுத் தாரிடல்) | M 09/C 10 | 20,000/= | 1,500/= | 180/= | 45/= |
| 05 | பிறவுண் வீதி 5ஆம் ஒழுங்கை - கலட்டி (கல்லிட்டுத் தாரிடல்) | M 09/C 10 | 10,000/= | 1,000/= | 120/= | 30/= |
| 06 | சப்பல் வீதி - யாழ்ப்பாணம் (கல்லிட்டுத் தாரிடல்) | M 08/C 09 | 36,000/= | 2,500/= | 300/= | 75/= |
| 07 | அடப்பன் வீதி - குருநகர் (கல்லிட்டுத் தாரிடல்) | M 09/C 10 | 6,000/= | 1,000/= | 120/= | 30/= |
| 08 | இராஜசிங்கம் வீதி - திருநகர் (கல்லிட்டுத் தாரிடல்) | M 08/C 09 | 32,000/= | 2,500/= | 300/= | 75/= |
| 09 | மண்பிட்டி குடியிருப்பு வீதி - நாவாந்துறை (கல்லிட்டுத் தாரிடல்) | M 08/C 09 | 36,000/= | 2,500/= | 300/= | 75/= |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடுவதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
II. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
V. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை யாழ்.மாநகரசபையின் வேலைப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.
VI. கேள்விப்பத்திரங்கள் 2009.09.01 ஆம் திகதி முதல் 2009.09.15 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அலுவலக நேரத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 2009.09.17 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
VII. கேள்விகள் யாவும் 2009.09.17 ஆம் திகதி நண்பகல் 2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
VIII. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீதியின் பெயருடன் வீதி வேலைக்கான கேள்வி என எழுதி "மாநகர ஆணையாளர்" யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
IX. கேள்விகள் தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்கட்கு தொழில்தருநர் பொறுப்பேற்கமாட்டார்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

க.க[illegible]
தலைவர், மாவட்டக் கேள்விச் சபை.


## சாரதி தேவை

IZUZU 250 வகை வாகனம் செலுத்துவதற்கு அனுபவம் உள்ள வாகன சாரதி தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:-0771674524

## தவறிவிட்டது

4ஆம் ஒழுங்கை, மானிப்பாய் வீதி, உடுவில் என்னும் முகவரியுடைய சண்முகநாதன் ஞானேஸ்வரி என்பவரது தே.அ.அட்டை (457652062V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## நல்லைக் கந்தன் வீடியோ

நல்லைக் கந்தன் மஹோற்சவ கால வீடியோ ஒளிப்பதிவுகளின் தொகுப்பு DVD யில் பெற்றுக்கொள்ளலாம்

**ஒறியன் வீடியோ**
521, பருத்தித்துறை வீதி,நல்லூர். T.P:- 0774028993


## யாழ். திரும்பியவர்கள் பரீட்சை எழுதுவதற்கு விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 29

யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளி மாவட்ட நலன்புரி நிலையங்களிலிருந்து க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி தற்போது யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தொடர்ந்து தோற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.கல்வி வலய அலுவலர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பரீட்சார்த்திகள் இன்று காலை 7.30 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் இருக்கும் க.பொ.த. (உ/த) பரீட்சைப் பிரதான இணைப்பு நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை எழுதுவதற்குத் தேவையான அடையாள அட்டை, எழுது கருவிகளோடு வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(1)


## படிவம்

இலங்கை தகவல் தொழில் நுட்ப நிலைய (SLIIT) பட்டப் படிப்புக்களுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

2009 க.பொ.த (உ.த) ப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம்.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

## தேவை

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் புதிதாக திறக்கப்படவிருக்கும் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த ஆள்கள் தேவை.

1. விற்பனையாளர்
2. கணக்கு பதிவாளர்
3. சமையல் ஆள்

இன்று பிற்பகல் 4.30 க்கு நேரில் வரவும்

27, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் இராசம்மா

(நல்லதண்ணி நாகம்மா - ஆசையம்மா, சிறாம்பியடி)



இல.49ஏ, சிறாம்பியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போதுகொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி மயில்வாகனம் இராசம்மா நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகமுதலியார் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில் அமிர்தலிங்கம் (முன்னாள் யாழ்.மாவட்ட காணி ஆணையாளர், DLO), சசிகலா (ராணி) ஆகி யோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.போ.மு. 76 பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்: கோ.சித்திரகுமாரன்
(முகுந்தன் - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.)

### திருமதி பாக்கியம் அண்ணாச்சாமி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் அண்ணாச்சாமி 27.08.2009 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாச்சாமியின் மனைவியும் கமலவேணி, காலஞ்சென்றவர்களான ஸ்ரீபத்மன், ஸ்ரீசத்தியானந்தன் மற்றும் சித்திரூபா, வித்தியா ஆகியோரின் தாயாரும், கிருஷ்ணசாமி, வசந்தா, தேவநாயகி, சசிகலா இரட்ணசிங்கம்,கருணாகரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை தற்காலிக வசிப்பிடமாகிய ஹற்றனில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கி.கமலவேணி (மகள்).

தற்காலிக முகவரி:
இ.சித்திபோ, ஹற்றன்.
0512223845

முருகன்கோவிலடி,
கிராம்புவில்,சாவகச்சேரி.
தொ.பே:- 0776577851

(88288)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சோமசுந்தரம்



புளியங்கூடலைச் சேர்ந்த நாகலிங்கம் சோமசுந்தரம் 25.08.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரும் குணபூசனியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (ஆசிரியர்), கந்தையா, இராசம்மா, அன்னம்மா, தெய்வானைப்பிள்ளை மற்றும் தில்லையம்பலம் (முன்னாள் லிகிதர், நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வரதலட்சுமி (கனடா), தனராசன் (ஊ.ப.நோ.கூ.சங்கம்), ரகுநாதன் (ஜேர்மனி), கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன் (ஆசிரியர் - கனடா), மாலினி, நிரஞ்சினி (ஜேர்மனி), சிவத்துரை (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சிவனுஜன், ஹரிகரன், சஜந்தனா, சாயிதன், சாருபன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
சொ.தனராசன் (மகன்).
T.P.: 0774409506
T.P.: 0602008728

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மஞ்சம் வீதியுலா ஆரம்பமாவதற்கு முன்னர் விசேட கிரியைகள் இடம்பெறுவதையும் சுவாமி மஞ்சத்துக்கு எழுந்தருளுவதையும் புதிய மஞ்சத்தில் சுவாமி வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# நலன்புரி நிலைய மக்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதுடன் அவர்களைச் சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்துங்கள்

## யாழ்.மறை மாவட்டப் பொதுநிலையினர் கழகம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.29

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் கூடிய எண்ணிக்கையானோரை அவர்களின் சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் நலன்புரி நிலையங்களில் உள்ள நோயாளர்கள், காயமுற்றோர், வலுவிழந்தோர், உடலில் குண்டுச் சிதறல்கள் உள்ளோர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோர் அங்கிருந்து வெளியேறி உகந்த சூழலில் சிகிச்சையும் பராமரிப்பும் பெறுவதற்கு அனுமதிக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது யாழ். மறை மாவட்டப் பொது நிலையினர் கழகம்.

இது தொடர்பாக அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

எமது கழகம் யாழ்.மறை மாவட்டத்திலுள்ள சகல பங்குகளையும் சார்ந்த பொது நிலைக் கத்தோலிக்க மக்களை (வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோர் உட்பட) பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வன்னி மக்களில் பெரும்பாலானவர்கள் இம்மறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற எமது கழகத்தின் புனர் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் எமது முதற்கவனம் வன்னியிலுள்ள தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் அல்லலுறும் (கத்தோலிக்கரும், இந்துக்களுமாகிய) எமது மக்கள் பற்றியதாகும்.

இம்மக்கள் மட்டில் தாங்கள் காட்டும் விசேட அக்கறைக்காக,

தங்கள் கட்டளைப்படி அவர்களது வாழ்க்கையை இலகுவாக்க ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வசதிகளுக்காக,

180 நாள்களுக்குள் அவர்களது சொந்த வதிவிடத்தில் அவர்களைக் குடியமர்த்துவதாகத் தாங்கள் அளித்த வாக்குறுதிக்காக நாம் நன்றி கூறுகிறோம்.

ஆயினும் இம்மக்களின் துன்பத்தை இயன்றளவு தணிக்கவும், துன்புறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் வேண்டி கீழ்வரும் வேண்டுகோள்களைத் தங்களிடம் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

* அவர்கள் தங்கள் உறவினர்கள் நண்பர்களைக் கூடிய நேரம் நல்ல சூழலில் (உ+ம் இதற்கென அமைக்கப்பட்ட ஆசனங்களைக் கொண்ட குடிசைகளில்) சந்திக்கவும், தேவைப்படும் உணவு அல்லது வேறு பொருள்களைப் பரிசோதிக்கப்பட்டபின் அவர்களுக்குக் கொடுக்கவும் அனுமதித்தல்.
* நோயாளர், காயமுற்றோர், வலுவிழந்தோர், உடலில் குண்டுச்சிராய் உள்ளோர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோரை முகாமை விட்டு வெளியேறி உகந்த சூழலில் தகுந்த சிகிச்சையும் பராமரிப்பும் பெற அனுமதித்தல்
* தொழில் காரணமாக வன்னிக்குச் சென்று அங்கு அகப்பட்டோரை முகாமிலிருந்து வெளியேறி தம் குடும்பங்களுடன் சேர அனுமதித்தல்
* சகல பல்கலைக்கழக மாணவர்களும் உயர்கல்வி நிறுவனங்களில் பயில்வோரும் விரைவில் தமது கல்வியைத் தொடர அனுமதித்தல்.
* ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது வயது வராத பிள்ளைகளுடனாவது முகாமை விட்டு வெளியேறி தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பும் வரை உறவினர் அல்லது நண்பர்களுடன் தங்குவதற்கு அனுமதித்தல்.
* மேற்படி வயதுள்ளவர்கள், போக இடமில்லாதவர்களாக இருந்தால் அவர்களைத் தக்க முதியோர் இல்லங்களில் தங்க வைத்தல்.
* ஏனையோரையும் அவர்கள் திரும்பி வரத்தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வெளிச் செல்லவும் , உறவினர், நண்பர்களைச் சந்திக்கவும் அனுமதித்தல்
* மதகுருமார்களும் அவர்களது உதவியாளர்களும் முகாமுக்குத் தடையின்றி வந்து மக்களின் ஆன்மீக, உளத்தேவைகளுக்கான பணி செய்ய அனுமதித்தல்.
* மக்கள் தமது பௌதீகத் தேவைகள், பொருள் தேவைகள், வைத்தியத் தேவைகளைக் கூடியளவில் பூர்த்திசெய்ய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கூடிய இடமளித்தல்.
* இறுதியானதும் எமது விண்ணப்பங்களில் மிக முக்கியமானதும் என்னவெனில் கூடிய விரைவில் கூடியளவு எண்ணிக்கையானவர்களை தமது சொந்த இருப்பிடத்தில் மீண்டும் குடியமர்த்த ஆரம்பித்தல்.

தங்களுக்கு நன்றி கூறுவதுடன் மனித இனத்தின் நலனுக்காக எடுக்கப்படும் எந்தச் செயற்பாட்டிலும், ஆலோசனைகளிலும் தங்களுக்கு எமது முழு ஒத்துழைப்பு உண்டு என உறுதி கூறுகின்றோம் என்றுள்ளது. (50)

# வயல் காணிகளில் உள்ள கிணறுகள் புனரமைப்பு

சுழிபுரம்,ஓக.29

சுழிபுரம், பறாளை வயல் காணிகளில் உள்ள கிணறுகள் வயல் சொந்தக்காரர்களினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் நெல் விதைப்புக்கு முன்னர் பூர்த்தியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிணறுகளின் நீர் மூலமாகவே நெல் அறுவடையைத் தொடர்ந்து தோட்டச் செய்கையையும் செய்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.(204-28)

# பொன்னாலை வயல் காணிகள் விவசாயிகளால் பண்படுத்தப்படுகின்றன

சுழிபுரம்,ஓக.29

பொன்னாலை வயல் காணிகள் யாவும் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகளால் உழுது பண்படுத்தப்படுகின்றன.

மழை பெய்தமையால் நிலம் உழுவதற்கேற்ற பதமாக இருப்பதால், சகல விவசாயிகளும் நெல் விதைப்புக்கான ஆயத்தங்களைச் செய்துள்ளனர்.

பொன்னாலை வயல் காணிகள் அதிக விளைச்சலைக் கொடுக்கும் நிலமாகக் காணப்படுகின்றமையால், மழை பெய்யாது இருந்தாலும் குளத்திலுள்ள நீரைப் பயன்படுத்தி நெற்செய்கையை மேற்கொள்ள வாய்ப்பாக அமையும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தொல்புரம் கமநல நிலையத்தினர் நெற்செய்கையாளர்களுக்கு வேண்டிய உர வகைகளை வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளனர். (203- 204-28)

# சுழிபுரத்தில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் மழை பெய்தமையால் பழுதடையும் நிலையில்

சுழிபுரம்,ஓக.29

சுழிபுரம் - பறாளை வயல், தோட்டக் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் அறுவடை செய்யும்வேளையில் மழை பெய்ததால் பழுதடையும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தில் மூழ்கிய வெங்காயத்தை அதிக கூலியாள்களின் உதவியோடு அப்புறப்படுத்தி மேட்டுக்காணிகளில் அடுக்கி காயவைத்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக வெங்காயத்தைக் காயவைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வெங்காயம் அமோக விளைச்சலைத் தந்தும், பயன்பெறும் வேளை மழை பெய்தமையால் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (203-204-28)

# வவுனியாவிலிருந்து வந்த நலன்புரி நிலைய மக்களுக்கு உணவல்லாத பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஓக.29

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்திற்கு வந்த குடும்பங்களுக்கு உணவுப்பண்டம் அல்லாத பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் இப்பொருள்களை விநியோகித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)


# நவாலி விவசாயச் சம்மேளனப் பிரிவில் உள்ள 4 பயனாளிகளுக்குத் தூவல் நீர்ப்பாசன உபகரணம்

யாழ்ப்பாணம்,ஓக.29

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கு உட்பட்ட வகையில் 4 பயனாளிகளுக்கு விரைவில் தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் மானிய விலையில் வழங்கப்படவுள்ளன என்று நவாலி விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் ஆ.யோகானந்தன் தெரிவித்தார்.

பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் திருமதி செ.மணிவண்ணனிடம் இதற்கான விவரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கச்சான், பயறு, கௌபி போன்ற உப உணவுப் பயிர்ச் செய்கைகளும் ஊக்குவிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-302)




# சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் தகனக்கிரியைக்கு அனுமதி

சுழிபுரம்,ஓக.29

சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் இறந்தவர்களின் உடல்களை இந்த மாதம் தொடக்கம் இராணுவ அனுமதியோடு தகனஞ்செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அண்மையில் இறந்தவர்கள் யாவரும் இந்த மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சுழிபுரம் பகுதி மக்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மயானத்துக்குச் செல்லமுடியாது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-204-28)

# பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கதைசொல்லும் போட்டிகள்

வண்ணை,ஓக.29

'கதை, கதையாம்...' என்னும் தலைப்பில் ஒவ்வொரு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் ஊடாகவும் 4-5 வயதுகளுக்கு உட்பட்ட பிள்ளைகள் முன்னிலையில் கதை சொல்வதாக அமையும் புது விதமான போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் நடைபெற இருக்கும் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னதாக கலாசார உத்தியோகத்தர்களிடம் 10 ரூபா செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்று நிரப்பி ஒப்படைத்தல்வேண்டும்.

புராணம், இதிகாசம், இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்ட நட்பு, உறவு, அன்பு, முயற்சி, அகிம்சை இவற்றில் ஒன்றைப் போதிக்கும்படியாக 7 நிமிடங்கள் மட்டும் கதைகள் சொல்லப்படல் வேண்டும்.

20 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் சிறுவர்கள் ஆகிய இரு பிரிவுகளில் இருபாலாருக்கும் இடையே போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்டப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-160)





## அன்னக் கந்தனின் அருள் வேண்டித் தொழுவோம்

தொண்டைமா னாற்றங் கரையினில் அமர்ந்தான்
திருவருட் செல்வன் ஏங்கள் சந்நிதி முருகன்
தொண்டர் மனங்குளிரத் தோன்றாத் துணைநிற்பான்
தோகைமயில் ஏறிவலம் வந்து அருள்தருவான்

அன்னம்பா லிக்கும் மடம் ஆயிரங் கண்டதலம்
இன்னம்பா லிக்கச்செய்தான் இவன்பேர் அன்னக்கந்தன்
பொன்னம்ப லத்திலாடும் பெருமானுக் குபதேசம்
சொன்னகுரு நாதனிவன் செல்வச்சந் நிதிமுருகன்

ஆடிவருங் காவடிகள்; அளவில்லாப் பக்தர் கூட்டம்
கூடிடும்; கரங்கள் கூப்பித் தொழுதிடும்; கண்ணீர் சிந்திப்
பாடிடும் மெய்மறந்து; பார்ப்பவர் மனங்கள் யாவும்
நாடிடுங் கந்தன் கோயில் செல்வச்சந் நிதியான் தலமே.

- மட்டுவில் நல்லதம்பி.

[இன்று (29.08.2009) சனிக்கிழமை
செல்வசந்நிதி முருகனுக்குப் பூங்காவனத் திருவிழா]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புலிகளின் பயங்கரவாதம் முடிந்துவிட்டது; தெற்கில் அரசின் பயங்கரவாதம் தீவிரமடைகிறது

## 'சுதந்திரத்துக்கான மேடை' என்னும் எதிர்க்கட்சி அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக.29

வடக்கில் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்தவுடன் தென்பகுதி மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று அநேகமானோர் நம்பினர். ஆனால் தென்பகுதி மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதே உண்மையாகும். இந்த உண்மையை நாட்டு மக்கள் அவைரும் உணர்ந்துள்ளனர்.

இவ்வாறு சுதந்திரத்துக்கான மேடை என்னும் எதிர்க்கட்சிகளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பில் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீதுங்க ஜயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பு அரசுக்கு எதிராக விடுத்துள்ள குற்றச்சாட்டில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுதந்திரத்துக்கான மேடை' அமைப்பின் பிரசாரக் கூட்டம் ஒன்று அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலைச் செய்வதற்கு அண்மையில் புலிகள் மேற்கொண்ட சதித்திட்டம் முறியடிக்கப்பட்டு விட்டது என்று அரசு பத்திரிகைகள் மூலமாக பிரசாரம் செய்து வருகிறது. எதிர்க்கட்சிகளை முடக்குவதை நோக்கமாகக் கொண்டு அரசு இப்படி ஒரு வதந்தியைப் பரப்பி வருகிறது.

முன்னரைவிட தற்போதுதான் பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் அதிகமாக உள்ளன. வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்கின்றன. சிங்கள இளைஞர்கள் கூட வெள்ளை வான்களில் வருபவர்களால் கடத்தப்பட்ட வண்ணம் உள்ளார்கள். எதிர்க்கட்சிகளினால் நடத்தப்படும் கூட்டங்களை குழப்புவதற்காக அரசினால் அடியாள்களும், காடையர்களும் அண்மைய நாள்களில் அனுப்பப்பட்ட வண்ணம் இருக்கின்றார்கள்.

எமது அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கலாநிதி பாக்கியசோதி சரவண முத்துவுக்கு படுகொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எமது அமைப்பைச் சேர்ந்த பலருக்கும் படுகொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன.

புலிப்பயங்கரவாதம் ஒழிந்து விட்டது. ஆனால்,ஏன் இப்படியான பயங்கரவாதங்கள் தொடர்கின்றன? கோத்தபாய ராஜபக்ஷவைக் கொல்வதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதாம். இது ஒரு கட்டுக்கதை ஆகும்.

புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர். ஆனால், தென்பகுதி மக்கள் தற்போது அநேக பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதை நோக்கமாகக் கொண்டு அரசு கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றது. மக்கள் இந்தக் கட்டுக்கதைகளை நம்பி ஏமாந்து விடக்கூடாது. அரசின் அக்கிரமங்களுக்கு எதிரான எமது போராட்டங்கள் தொடரும்- என்றார். (சி)

# சுயதொழில் உதவிக்கு விண்ணப்பித்தோரில் மேலும் 11 பேருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஒக.29

சமூகசேவைகள் திணைக்களத்திற்கு சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றலுடைய மேலும் 11 பேருக்கு முதல் கட்டக் கொடுப்பனவாக தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பின்வருவோர் எதிர்வரும் இரண்டாம் திகதி புதன்கிழமை தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

தாமன் வேலுப்பிள்ளை (இயற்றாலை), பொன்னையா தேவராசா (மீசாலை வடக்கு), செல்லன் சங்கரசிவம் (மட்டுவில் மத்தி), குமாரசாமி நந்தகுமார் (மட்டுவில் தெற்கு), பாலச்சந்திரன் கஜேந்திரன் (கற்குளி, முதலாம் ஒழுங்கை).

கந்தையா யோகரத்தினம் (கச்சாய் வீதி, சாவகச்சேரி), தில்லையம்பலம் செல்லம்மா (கரம்பைக்குறிச்சி மேற்கு), யோகநாதன் சாவித்திரி (மட்டுவீல் வடக்கு), துரைராஜா அருந்தவமலர் (மட்டுவில் மத்தி), செல்லப்பா நாகேந்திரன் (மட்டுவில் மேற்கு), சின்னத்தம்பி இிராசரத்தினம் (மிருசுவில் வடக்கு). (203-207)

# வலி.வடக்கு உப்பன் அளவை வீதியை விரைவில் புனரமைக்குமாறு கோரிக்கை

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட உப்பன் அளவை வீதியை புனரமைப்புச் செய்து தருவதாக உறுதியளித்து இரண்டு வருடங்கள் முடிவடைந்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சுன்னாகம் ஐயனார் ச.ச.நிலைய நிர்வாகிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 13.07.2007இல் உரிய அதிகாரிகளால் விரைவில் இந்த வீதி திருத்தி அமைக்கப்படும் எனவும் தற்போது போதியளவு நிதி கையிருப்பில் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனினும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. மேற்படி வீதி கடந்த 50 ஆண்டுகளாக மீள் புனரமைப்பு இன்றிக் காணப்படுகின்றது.

தினமும் 600 முதல் ஆயிரத்தி 250 வரையிலான மக்கள், விவசாயிகள், அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதியை உடன் மீள் புனரமைப்புச் செய்துருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (203-302)

# வெள்ளிவிழாக் காணும் அருட்பணியாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக.29

மன்னார் மறை மாவட்டத்தை சேர்ந்த 4 அருட்பணியாளர்கள் குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்து வெள்ளிவிழா காண்கிறார்கள்.

கடந்த 22ஆம் திகதி குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் அருட்பணியாளர்களான, மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி எம். லடிஸ்லோஸ், அருட்பணி ரி.நவரெட்ணம், அருட்பணி ஜே. தேவசகாயம்பிள்ளை, அருட்பணி பி. ஞானசேகரம் பிரான்சிஸ் ஆகியோரே வெள்ளிவிழா காண்கின்றனர்.

கடந்த 1984ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முன்னாள் மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இவர்கள் புனித குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். (203- 302)


## மணமகள் தேவை

1977இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தின், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் கிரகபாவம் 18உம், 2இல் செவ்வாயும் உடைய மணமகனுக்குப் பொருத்தமான மண மகள் தேவை.

தொடர்பு: 077 8446218. (88186)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**CBF, DBF**

**வங்கியியல் கற்கை நெறிகள்**

Medium: Tamil & English
Minimum Requirement: G.C.E. O/L 06 Passes

**aat (SriLanka)**

Foundation Level, Intermediate Level, Final Level
Medium: Tamil & English
Minimum Requirement: G.C.E. O/L 06 Passes
A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.08.2009 ஞாயிற்றுக்கிழமை 9.00 a.m.

**CHARTERED** (பட்டயக்கணக்காளர் நிறுவனம்)

Certificate in accounting and Business - 1 (CAB - I)
Certificate in accounting and Business - 1 (CAB - II)
Diploma in accounting and Business
Medium: Tamil & English
Minimum Requirement: G.C.E. A/L 03 Passes

**CIMA** (முகாமைத்துவ பட்டயக்கணக்காளர் நிறுவனம்)

Certificate Course in Business Accounting
Medium: English

Further Details:
Director,
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
/560501)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 20 10 1937 — மறைவு 05 09 2003



**V.T.கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

திதி: 29.08.2009

ஆண்டுகள் உருண்டாலும் அழியாது உம் நினைவுகள்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு.

நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

(88253)

## ராஜன் வைத்திய நிலையம்

சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது வைத்திய நிலையத்துக்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகிறார்கள்.

* சத்திர சிகிச்சை நிபுணர்-
  காலம்: 30.08.2009 மதியம்
* மகப்பேற்று வைத்திய நிபுணர்-
  வார இறுதி நாள்கள்.

மற்றும் விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகளும் நடைபெறும்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

கருகம்பன் வீதி,
புலோலி மத்தி (மந்திகை),
(யாழ்-பருத்தித்துறை வீதி)
புலோலி.

தொ.பே: 0602737308,
0774910252

* பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் மக்கள் வங்கி கிளைக்குப் பின்புறமாக.

நிர்வாகி.

(87676)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு நிர்வாக உதவியாளர், கணனி உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

க.பொ.த.(உ/த) தகுதியுடன் கணனி, ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. தகுதியானவர்கள் சுயவிவரத்துடன் 7 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.: 3931, மே/பா.: உதயன்.

## மருத்துவப் பட்டப் படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு!

ரஷ்ய நாட்டில் மருத்துவப் பட்டப்படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல், ரஷ்யாவில் கல்வி பயில்கின்ற மருத்துவ பீட மாணவர்களினால் வழங்கப்படுகின்றது.

தொடர்பு: 0771028756
E.mail- sentgolanka@yahoo.com
K.Gobikirshnan
(medical student in BSMU)

(88109)

## தேவை

யாழ்.பிரதான வீதியிலுள்ள பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோமில் Philips Nursing Home) மிக நவீன வசதிகளுடன் கூடிய

I சத்திர சிகிச்சைக் கூடம்
II வார்ட்டுகள் (நோயாளர் விடுதி)
III வெளிநோயாளர் பிரிவு

என்பவற்றில் பணியாற்றுவதற்கு பின்வரும் ஆள்கள் தேவை

I பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்
II வரவேற்பாளர் (கணனி தட்டெழுத்து அனுபவமுள்ளவர்)
III தாதியர் சேவை பயிற்சிநெறியில் சேர்ந்து பழக விரும்புபவர் (பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்)

நேர்முகத் தேர்வு 30.08.2009 (ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு Philips Nursing home, இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சிறைச்சாலை முன்பாக) இடம்பெறும். தொ.பே.இல. 021 222 4172

(88242)

## இலவச கணனி வகுப்புகள்

சங்கானையில் இயங்கிவரும் New micro Computer System தனது 4ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு 01.09.2009- 30.09.2009 வரையான காலப் பகுதியில் இணையும் மாணவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு கற்கை நெறியை இலவசமாகத் தொடரமுடியும்.

New micro Computer System

## மரண அறிவித்தல்



**பீற்றர் பொன்கலன்**
(உரிமையாளர், கிப்ஸ்சலா தச்சுத் தொழிற்சாலை, சென்.பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்.மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் பொன்கலன் (25.08.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டோமினிக் எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனவல்- றோஸ்மலர் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனி அம்மாவின் அன்புக் கணவரும் கிப்ஸ்சலா (சுவிஸ்), கனிஸ்ரா, ரகு (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இயேசுதாசன், அருள்தாசன், காலஞ்சென்றவர்கள்ான இம்மனுவல், ஜேம்ஸ் விஜயன் ஆகியோரின் அன்பு மாமனும் கிசாந்தி, டொனால்ட், ஜெனிபா ஆகியோரின் அன்புப் பேரனும் றீற்றா, விக்ரர் சேவியர் (குணம்), அன்ரன் ஆஞ்சலோ (போதகர்), பிறிற்றோ மைக்கல் (போதகர்), பேனாட், சுசிலா, நிர்மலா, அன்ரூ ராஜசூரியர் (போதகர்), டேவிற் பாலசூரியர் (போதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.08.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.33, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776110194,
0602214604. (88267)

தகவல்:
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்குலானை இரட்டைக் கொலை:

# பொறுப்பதிகாரியும் ஏனைய பொலிஸாரும் இளைஞர்களைக் கடுமையாகத் தாக்கினர்!

## பிரதான சாட்சியான பெண் சாட்சியம்

கொழும்பு,ஓக.29

அங்குலானையில் படுகொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களும் பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டனர் எனவும் அவ்வேளையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நியூட்டன் மது போதையில் இருந்தவர் போலக் காணப்பட்டார் என்றும் அக்கொலையின் முக்கிய சாட்சியான பெண் சாட்சியமளித்துள்ளார்.

கொழும்பு அங்குலானையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் சடலங்களாக மீட்கப்பட்ட இளைஞர்கள் தொடர்பான விசாரணைகள் கல்கிஸை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

குறித்த இரு இளைஞர்கள் தொடர்பாக முதலில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த கல்பாணி பெர்னாண்டோ என்ற பெண் கல்கிஸை பிரதம நீதிவான் ஹர்சா சேதுக்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தார்.

இரு இளைஞர்கள் குறித்தும் முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்குச் சென்றவேளையில்தான் முதன் முதலில் அங்குலானை பொலிஸ் நிலையப் பிரதம பொலிஸ் அதிகாரியைச் சந்தித்தார் என கல்பாணி பெர்னாண்டோ (வயது - 35) நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியுடன் தனக்கு உறவு இருந்தது என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

படுகொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களும் தன்னையும் தனது குடும்பத்தவர்களையும் துன்புறுத்தி வந்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்றிரவு இரு இளைஞர்களும் தனது வீட்டுக்கதவைத் தட்டி சிகரட் கேட்டனர் என்றும் வீட்டிற்குள் பலவந்தமாக நுழைந்து தனது கைகளைப் பிடித்து இழுத்தனர் என்றும் கல்பாணி பெர்னாண்டோ கூறினார்.

''இதன் பின்னரே நானும் எனது கணவரும் ஏனையவர்களும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தோம். எமது முறைப்பாட்டின் ஒருபகுதி மாத்திரமே பதிவுசெய்யப்பட்டது. அங்குலானை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அப்போது அங்கு இருந்தார். அவர் மது அருந்தியவர் போன்று காணப்பட்டார்'' என கல்பாணி பெர்னாண்டோ நீதிமன்றில் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்தில் தாங்கள் இருந்தவேளையிலேயே இரு நபர்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொறுப்பதிகாரியும் ஏனைய பொலிஸாரும் தங்களின் முன்னாலேயே அவர்களைத் தாக்கினர் எனறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''அதன்பின்னர் நாங்கள் அங்கிருந்து வீட்டிற்கு வந்துவிட்டோம். சிறிது நேரத்தில் இரு இளைஞர்களினதும் பெற்றோர் என்னிடம் வந்து பொலிஸுக்குச் செல்லாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று தெரிவித்தனர். நாங்கள் மறுநாள் காலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சமாதானமாகப் போவதற்குத் தீர்மானித்தோம்.

எனினும், மறுநாள் காலை இரு இளைஞர்களதும் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று அறிந்ததும் நாங்கள் பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல முயன்றோம். ஆனால், பொலிஸ் நிலையத்தைச் சுற்றி பொதுமக்கள் திரண்டிருந்தமையால் நாங்கள் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறத் தீர்மானித்தோம்'' - என்று கல்பாணி தெரிவித்தார். (சி)

## வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.29

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் யாழ்.கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கான நடமாடும் சேவையொன்று நடத்தப்படவுள்ளது.

எனவே யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் மேற்படி ஊழியர்கள் பிரச்சினைகள் இருப்பின் யாழ்.கல்வி வலயத்துக்குச் சமுகமளித்து அவை தொடர்பான படிவத்தைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்பதாகச் சமர்ப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (201)

# அரசியல் தலையீடுகள் காரணமாக இலங்கையில் வறுமை ஒழிப்பு மந்தம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஓக.29

இலங்கையில் அரசியல் தலையீடுகள் காரணமாக வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன ஏன்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

'இலங்கையில் நிலவும் வறுமை மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் அபிவிருத்தி' என்ற தலையங்கத்தில் புதிதாக வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் அரசியல் தலையீடுகள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதேபோல அரச நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஏனைய சக அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பெரிதும் தலையீடு செய்கின்ற பாதகமான நிலைமையையும் இலங்கையில் காணமுடிகின்றது.

இதனால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலும் மிகவும் பலவீனமான நிலையிலும் காணப்படுகின்றன. இலங்கையில் அதிகரித்துச் செல்லும் அரசியல் தலையீடுகள் மற்றும் அரச நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மீது பிரயோகித்து வரும் தலையீடுகள் ஆகியன இலங்கையின் வறுமை நிலை தொடர்ந்தும் நிலைத்து இருப்பதற்குப் பிரதான காரணிகளாகிவிட்டன. இலங்கையில் வகைதொகையின்றி ஏராளமான அரச நிறுவனங்கள் இருக்கின்றன. இதனால் இலங்கையின் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் குழப்பகரமான சூழ்நிலை மலிந்து காணப்படுகின்றது.

தங்கள் தங்கள் செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய தேவையிலிருந்து அரச நிறுவனங்கள் தப்பிவிடுகின்றன. இலங்கையின் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்ந்து பலவீனமானவையாகவே இருந்து வருகின்றன. இதனால் இலங்கையில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளையும், வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் வெற்றிகரமாக முன்னெடுப்பதில் தொடர்ச்சியான சிக்கல்கள் இருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் 11 லட்சம் பேர்வரை அரச சேவையில் இருக்கின்றார்கள். அதாவது மிகவும் அளவுக்கு அதிகமான தொகையினர் அரச நிறுவனங்களில் கடமையாற்றி வருகின்றார்கள் என்பது வெளிப்படை. இதனால் அரச நிறுவனங்கள் ஒழுங்குமுறை இல்லாமல் செயற்பட்டு வருகின்றன. இதனால் இந்த நிறுவனங்களிடம் தங்கள் தங்கள் செயற்பாடுகள் தொடர்பாகப் பொறுப்புக்கூறும் தன்மைகள் கிடையாது. இவற்றின் நடவடிக்கைகள் சீரற்றுக் காணப்படுகின்றன. ஓர் அரச நிறுவனத்தில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றித் தெரியாத நிலையில் ஏனைய அரச நிறுவனங்களும் அதே நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கும்போது தேவையற்ற பிரச்சினைகள் தோற்றம் பெற்று வருகின்றன. இதனால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஏனைய அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் தலையிட வேண்டி ஏற்படுகிறது.

இதனால் இலங்கையின் அரச நிறுவனங்களிடையே கூட்டுப்பொறுப்பு இல்லாத சூழ்நிலையைக் காண முடிகின்றது.

இலங்கையில் உள்ள 56 அமைச்சுகள் தங்கள் தங்கள் நடவடிக்கையில் ஒன்றின் மீது ஒன்று மிகவும் அதிக அளவில் தலையிட்டு வருகின்றன.

இதனால் இலங்கையின் அரச நிறுவனங்கள் மீது தவிர்க்க முடியாத அளவில் அரசியல் செல்வாக்குகள் மிதமிஞ்சிய அளவில் புரையோடிக் காணப்படுகின்றன. அரசியல் தலையீடு இல்லாமல் அரச நிறுவனங்களில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கமுடியாத நிலைமை வெளிப்படையாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. ஏனெனில் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கவென நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி ஓரளவு வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர். அத்துடன் அரசியல்வாதிகளை அனுசரித்து நடக்கத் தவறுகின்ற ஆசிரியர்கள் கட்டாய இடமாற்றத்துக்கு இலங்கையில் உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

சமுர்த்தி நிவாரணங்களை வறியவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளிலும் அரசியல்வாதிகளின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. இதனால் வறியவர்களைச் சென்றடையவேண்டிய உதவிகள் வறியவர்களுக்கு கிடைக்கப் பெறாமலும் விடுகின்றன. (சி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.29

வரணி மகாவித்தியாலய ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (201)

## வேலணை வைத்திய அதிகாரி நயினாதீவில் பதில் கடமை

வேலணை,ஓக.29

நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.சண்முகராசா விடுமுறையில் இருப்பதால் வேலணைப் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு பதில் கடமையாற்றுகிறார்.

இவர் வேலணை வைத்தியசாலையில் பகல் வேளையிலும், பிற்பகல் 3 மணிக்குப் பின்னர் நயினாதீவு வைத்தியசாலையிலும் கடமையாற்றுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-267)

## மாற்று வலுவுடையோருக்கான அபிவிருத்தியின் கீழ் 17 பயனாளிகளுக்கு 50ஆயிரம் ரூபா வீதம் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.29

விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மாற்று வலுவுடையோருக்கான அபிவிருத்தியின்கீழ் 17 பயனாளிகளுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சமூகசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி செ.சுரேந்திரா இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

50ஆயிரம் ரூபாவில் முதற்கட்டமாக 20 ஆயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை முதியவர்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 5 பேருக்குச் சுயதொழில் ஊக்குவிப்புக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 10 குடும்பங்களுக்கும் சமூக சேவைகள் திணைக்களத்திடமிருந்து இரண்டாம் கட்ட சுயதொழில் கொடுப்பனவாக 7ஆயிரத்து 500ரூபா வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வகையில் விசேட தேவை உடையவர்களுக்கான விவரம் கிராம அலுவலர் ஊடாக விரைவில் திரட்டப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைப் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் மேற்கொண்டுள்ளார் என சமூக சேவைகள் அதிகாரி தெரிவித்தார். (203-302)

## உரமானியத்துக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.29

நவாலி விவசாயிகள் சம்மேளனம் உரமானியத்திற்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கி வருகின்றது.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட விவசாயிகள் படிவங்களைப் பெறுமாறு தலைவர் இ.வன்னியசேகரம் கேட்டுள்ளார்.

உரமானியப் படிவங்களைச் சம்மேளனச் செயலாளர் ஆ.யோகானந்தனிடம் பெற்று உடன் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. (203-302)





குருநகரில் இருந்து புலம்பெயர்ந்து நோர்வே பேர்கன்- ஒஸ்லோவில் வசிக்கும் உடன்பிறப்புகள் தமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காகக் கடந்த ஏழு மாதங்களாகக் குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தினூடாக மாலைநேர வகுப்புகளை நடத்தினார்கள். இதில் கல்வி கற்ற மாணவர்களைப் பரீட்சைக்கு வாழ்த்தி அனுப்பும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. உதவிப் பங்குத்தந்தை தீபம் ஏற்றி வைப்பதையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையினர் அண்மையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், இளவாலை கன்னியர்மடம் ம.வியிலும் மக்கள் வங்கியின் 'சிசு உதான' அலகுகளை ஆரம்பித்து வைத்தனர்.


இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் பாடசாலை உப அதிபர் அருட்தந்தை பா.பிராயன் அடிகள், இளவாலை கன்னியர்மடம் ம.வியில் உப அதிபர் செல்வி ம.அருளானந்தம் ஆகியோர் அலகுகளை நாடாவெட்டி திறந்து வைப்பதை முதல்இரண்டு படங்களிலும் காணலாம்.

இளவாலை கன்னியர் மடம் ம.வி மாணவி ஒருவருக்கு மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் நா.துரைராசா சிசு உதான வங்கிக் கணக்குப் புத்தகத்தையும் பரிசையும் வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: சங்கானைச் செய்தியாளர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 . 04 . 1923



இறப்பு 09 . 09 . 2008

**திருமதி அருளம்பலம் நாகம்மா**

திதி: பூர்வபட்ச தசமி
(29.08.2009)

வையகத்தில் வாழ்ந்த வானுறை தெய்வமே!
அன்பின் வடிவமே!
நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டாயினும்
நீங்கா நினைவுகளாய் நிலைத்து நிற்கும்- உங்கள்
நினைவுகள்.

இராச வீதி, நீர்வேலி மேற்கு. குடும்பத்தினர்.

(88193)

## நவாலி கிழக்கு முதியோருக்கு போசாக்குணவு

நவாலி,ஒக.29

நவாலி கிழக்கு முதியோர் சங்க அங்கத்தவர்களுக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் கடந்த வாரம் இலைக் கஞ்சி போஷாக்குணவு வழங்கியுள்ளனர்.

சகல விதமான மூலிகைகள் சத்துக்கள் நிறைந்த இலை வகைகள், மரக்கறிகள் என்பவற்றை தாமே எடுத்து வந்து நவாலி பொது மண்டபத்தில் முதியோர் சங்கத்தினரின் உதவியுடன் சமையல் செய்து நண்பகல் வேளை கஞ்சி வழங்கினார்கள்.

(203-100)

## நெஞ்சை விட்டு அகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**குகதாம்பாள் கோபாலசுந்தரம்**

(Dip.in.Music, SLTS-I, பட்டதாரி,
பட்டப்படிப்பின் பின் பயிற்றப்பட்ட
ஆசிரியை, சங்கீத கலாவித்தகர்,
அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி
அம்மன் ஆலய ஓதுவார்)

திதி: தசமி

மலர்வு 24 . 10 . 1947



"ஆண்டு ஒன்று ஓடி மறைந்திடினும்
உங்கள் நினைவுகள் மறந்திடுமோ"
என்றும் உங்கள் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**
30/15, கனகரெத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். 0602219123.

உதிர்வு 10 . 09 . 2008

(88245)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

# அமரர் கிட்டினன் கதீஸ்வரன்



மலர்வு 28 . 12 . 1983

உதிர்வு 10 . 09 . 2008

**திதி: 29.08.2009**

கனிவுள்ளம் கொண்டவனே கதீஸ்வரனே!
காலனவன் கொடியவன்தான் ஈவிரக்கம் பாராமல்
உன்னைக் கவர்ந்திழுத்துச் சென்றானோ?
பொறுக்கவில்லை எம் நெஞ்சம் பொருமி வெடிக்கிறது
வானமதில் சூரியன் உதித்திடலாம்- எனினும்
நீ இன்றி ஒளி பெறுமோ எம் வீடு
வியந்து நின்றோம் நாம் உன்னைக் கண்டு
ஆனால் பொறுக்க முடியாத படுபாதகர்
உன்னைப் பொசுக்கி எறிந்து விட்டனரே.

உன் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

(சி-160497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



கோண்டாவில் ஸ்ரீ விக்கினேஸ்வரா பாலர் பாடசாலை ஞானக்குழந்தை இல்லத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைக் காணலாம்.



கச்சாய் பொதுநூலக இளந்தளிர் இல்லத்தால் முன்பள்ளி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு ஆசிரியை திருமதி எஸ்.சிவராஜலிங்கம் பரிசில் வழங்குவதையும் அருகில் பொதுநூலக நூலகர், பிரதேச சபைச் செயலாளர் ஆகியோர் நிற்பதையும் காணலாம். *(படம்: தென்னவன்)*



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நிர்வாகம் மற்றும் பிரதான அலுவலகப் பகுதிகளைக் கொண்ட புதிய கட்டடத் தொகுதி 35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டடத் தொகுதியின் வேலைகள் நிறைவடையும் நிலையில் காணப்படுகின்றது. *(படம்: அருணன்)*



கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் சுனாமி வாழ்வாதாரத் திட்டத்தின் தொழில்பயிற்சிப் பிரிவால் வழங்கப்பட்ட கணனிப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.ஜோ.ஜெயக்குமார், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூ, மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்பணி ம.ஞானேந்திரன், பாடசாலை அதிபர் எஸ்.உதயகுமார் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்களுடன் பயிற்சிநெறியை நிறைவு[illegible] தைக் காணலாம். [illegible]



மானிப்பாய் லயன்ஸ் கழகத்தால் அராலியில் இலவசமாகக் கண்பரிசோதனை செய்து கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கழகச் செயலாளர் லயன் கே.சுதாகரன் பயனாளி ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்குகிறார். அருகில் கழக முன்னாள் தலைவர் லயன் டாக்டர் ஆர்.சாந்தன், தற்போதைய தலைவர் லயன் ஆர்.இராயசூரி ஆகியோர் நிற்கின்றனர்.




வடக்கு மாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் விழிப்புலனற்றோருக்கான விசேட கணனிப்பயிற்சி நிகழ்வில் இரண்டாம் கட்ட நிகழ்வின் ஆரம்ப விழா யாழ்.பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.



புன்னாலைக்கட்டுவன் அ.ர.சினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளையினால் 'சிசுஉதான' சிறுவர் சேமிப்பு அலகுத் திறப்பு விழாவில் பாடசாலை அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கிளைமுகாமையாளர் இ.யோகராசா மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



மீள் எழுச்சித்திட்டத்தின்கீழ் பன்னாலை பிள்ளையார் வீதி புனரமைப்புச் [illegible]து. புனரமைப்புப் பணிகளில் அப்பிரதேச மக்கள் ஈடுபட்டிருக்கும் காட்சி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்கள் என்ற இனம் சொல்லொணாத் துயரத்தை எதிர்கொண்டுள்ளது

## யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.29

தமிழர்கள் என்ற இனம் இலங்கையில் சொல்லொணாத் துயரங்களை எதிர் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இதனைச் சர்வதேச சமூகத்துக்கு முதன் முதலில் எடுத்துக் கூறிய ஒரேஒரு தலைவர் அமரர் அமிர்தலிங்கம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செய லாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அமிர்தலிங்கத்தின் பிறந்தநாள் நினைவு நிகழ்வுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றன.

உடுவில் கிராம சபையின் முன்னாள் தலைவர் முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன், யாழ்.மாநகர சபையின் முன் னாள் உறுப்பினர் செ.விஜயரட்ணம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இரா.சங்கையா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வரு மாறு:-

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு தனக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியையே தூக்கியெறிந்தவர் எமது பெருந்தலைவர் அமிர்தலிங்க அமிர்தலிங்கத்தின் இழப்பு எமது இனத்துக்கான பேரிழப்பாகும். அவர் இருந் திருந்தால் இன்று இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காது. முட்கம்பி வேலிக்குள் எமது இனம் முடக்கப்பட்டிருப்பதை ஒரு போதும் அனுமதித்திருக்க மாட்டார்- என்றார்.

இரா.சங்கையா உரையாற்றுகையில்:-

அமரர் அமிர் கண்ட கனவை நாம் நன வாக்க வேண்டும். அதற்கு நாம் எமது கட்சியைப் பலப்படுத்தி அதன்மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெ டுக்க வேண்டும். அமரரின் பிறந்த தினத்தில் இதற்கான திடசங்கற்பம் பூண்டு ஒற்றுமையாகச் செயற்பட வேண் டும்-என்றார். (203)

## கலைப் பட்டயக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஓக.29

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் 2009/ 2010 ஆம் கல்வியாண்டுக்கான சமூக விஞ்ஞான கலைப்பட்டக் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது.

ஜீ.சி.ஈ.உயர்தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் 11.09.2009 இற்கு முன்னர் தங்களது விண்ணப்பங் களை சமர்ப்பிக்குமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (203-06)

## மக்கள் முகம்



கொழும்பு உன்னத தலைமைத்துவம் மற்றும் ஆளுமை அபிவி ருத்தி நிலையத்தினால் 2008 ஆம் ஆண்டுக்கான பிரபல பிரமுகராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் வங்கியாளர் நிறுவனத்தின் பிராந்திய மையத்தை யாழ்ப் பாணத்தில் நிறுவ மூலகாரணமாக இருந்தவர். வடமாகாண அலு வலர்கள், மாணவர்களை இந் நிறுவனத்துடன் இணைக்கும் இணைப் பாளராகவும், வளவாளராகவும் செயற்படுகின்றார்.


அத்துடன் யாழ். மாவட்ட முகாமையாளர்கள் பொது மன்ற நிறுவு நர்களில் ஒருவராக இருந்து மக்களின் மேம்பாட்டுக்கான கருத்தரங் குகளைப் பல்வேறு விடயங்களில் ஏற்பாடு செய்து வருகின்றார்.

யாழ். மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு, நலன்புரி, கலை, இலக்கிய மன்றத்தின் காலாண்டு வெளியீடான ''ஊக்கி'' இதழின் ஆசிரியராகவும் உள்ளார்.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக கடமையாற்றும் இவர் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் முகமாக பல சேவைகளைப் புரிந்து வருகிறார்.

வங்கித் தொழிலில் அங்கத்துவப் புலமையுடன் சேவையாற்றும் இவர் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடம் புதிதாக உருவாக்கிய யாழ். ஊட்டச்சத்துச் சங்கத்தின் பொருளாளராகச் செயற்படுகின்றமை போன்ற பணிகளில் ஈடுபடுத்தி தன்னலம் மற்ற உன்னத சேவையை வழங்கி வருகின்றார். (9)

## புத்தகசாலை




### தனியார், அரச, மத்திய வங்கிகளுக்கான ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

தனியார், அரச, மத்திய வங்கிகளுக்கானஆள்சேர்ப் புப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல் வெளி வந்துள்ளது.

வங்கிகளில் ஆள்சேர்ப்புக்காக நடத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சைகளை இலகுவாக எதிர்கொள்ளும் முறைகளைப் பொது அறிவு, நுண்ணறிவு விடயப் பரப்புகளூடாக வினாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கில மொழிகளில் வினாவிடைகள் இரு கூறுகளாக அச்சிடப்பட்டுள்ளமையும் இன்னொரு சிறப்பம்சம்.

### செல்வச்சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்




'செல்வச்சந்நிதி வேலவனிக் அற்புதங்களும் அனுக் கிரகங்களும்' எனும் இலவச வெளியீட்டிதழ் வெளிவந் துள்ளது.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதியான் திருவளுளின் அற்புதங்களையும், அனுக்கிரகங்களையும் கவிதை, கட்டுரை வடிவில் முருகனின் மெய்யடியார்கள் இதில் பதித்துள்ளனர்.

அன்னதானக் கந்தன் என்று சைவப் பெருமக்களால் போற்றப்படுகின்ற செல்வச்சந்நிதியான் திருவருளின் மகிமை தனை நூல் வடிவில் தந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

### சங்கச் செய்யுட்கள்




தேவரையாளி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் பூ.நகுலன் எழுதிய ''சங்கச் செய்யுட்கள்'' நூல் வெளி வந்துள்ளது.

க.பொ.த.உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

குறுந்தொகை, நற்றினை, புறநானூறு என்பவற்றின் பாடல்கள், பதப்பிரிப்பு, பொருள், பொருள் விளக்கம், பொருட் சிறப்பு, மாதிரி வினாக்கள் என்பவற்றை உள் ளடக்கியதாகச் சங்கச் செய்யுட்கள் நூல் வெளிவந் துள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்கள் குறிப்பாக தமிழ்த்துறை சார்ந்தவர்கள் படித்துப் பயன்பெறக் கூடிய நூலாகும்.

## மக்கள் சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றிய சிவகாமி மகாதேவன்



2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று எம்மையெல்லாம் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, அம்பாள் திருவடியைச் சென்றடைந்த அமரர் சிவகாமி மகாதேவன் அவர் களை எம்மால் மறக்கமுடியாது. அவரது ஓராண்டு நினைவு நாளிலே அவர் ஆற்றிய சேவைகளை நினைவு கூருகிறோம்.

வரலாற்றுச் சிறப்பும், ஆன்மீகப் பொலிவும் பெற்று சைவமும், தமிழும் தழைத்தோங்கும் நயினையம்பதியில் புகழ்பூத்த குடும்பத்தில் தோன் றியவர் சிவகாமி. சைவப் பாரம்பரியங்கள் நிறைந்த சமயப் பணியாற்றிய குடும்பம் அவரது குடும்ப மா கும். நயினை மண்ணில் ஆட்சிபுரியும் அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சம் பெற் றோர், சான்றோர்களாக இம்மண்ணில் வாழ்ந்துள் ளார்கள். இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். சிறப்புப் பெருமையும், தொன்மையும் வாய்ந்த அம்பாள் ஆலயத்தின் ஆதீனகர்த்தாக்களுள் ஒருவராக இருந்தவர். இவரது தந்தையார் அமரர் நாராயணபிள்ளை வைத்திலிங்கம் அவர்கள். தந்தையார் காட்டிய வழியில் நின்று அம்பாளுக்குப் பணி செய்தவர் அமரர் சிவகாமி. அம்பாள் ஆலய அறங்காவலர் சபையில் ஓர் உறுப்பினராகத் தெரிவாகி அம்பிகையின் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். முதற் பெண்ம ணியாகத் தெரிவு செய்யப்பட்ட பெருமை யும் இவருக்குண்டு. ஆலய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தன்னாலியன்ற பங்களிப்பை வழங்கியவர்.

### நீத்தார் நயப்புரை

பல்லாண்டு காலம் நயினாதீவின் உப அஞ்சலதிபராகப் பணியாற்றி மக்கள் பணி செய்தார். உப அஞ்சல் அதிபர் பதவியின் மூலம் மக்களுக்குச் செய்யக்கூடிய பணிகள் எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்தவர். 1973 ஆம் ஆண்டு உப அஞ்சலகம், அஞ் சலகமாகத் தரமுயர்த்தப்பட்டபோது திணைக்களம் அமரர் சிவகாமி அவரையே பதவி உயர்வுடன் அஞ்சலதிபராக நியமித்தது.


நயினாதீவு அஞ்சலகத்திலிருந்து இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம், கொழும்பு அஞ்சலகங்களில் சேவையாற்றி தனது சேவையில் இருந்து ஓய்வுபெற்றுக் கொண்டார்.

தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சின்னத்தம்பி மகாதேவன் அவர்களைக் கரம் பிடித்து இல்லறத்தை நடத்தி வந்தார். ஓய்வு பெற்றதன் காரணமாக கணவருடன் கொழும்பில் வாழ்ந்து வந்தார்.

சமயத்திற்கும், சமூகத்திற்கும் அரும்பணியாற்றியவர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்களுள் அமரர் சிவகாமி அவர்களும் ஒருவராவர். ''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே'' என்ற நல்வாக்கிற்கமைவாக தான் பிறந்த புண்ணிய பூமியாகிய நயினையம்பதிக்கு 2008 ஆம் ஆண்டு அம்பிகையின் உற்சவம் காணக் கொழும்பில் இருந்து கணவருடன் சென்றவர். அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொண்டு உற்றார், உறவினர்களுடன் உற வாடி மகிழ்ந்திருந்தார். அவ்வேளை அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக அவருக்கு மரணம் ஏற்பட்டது. மனிதநேயம் மிக்கவராக வாழ்ந்த சிவகாமி அவர்களை விண்ணுலகில் தனக்குச் சேவை செய்ய என அம்பாள் அழைத்துவிட்டாள் போலும் - அவர் செய்த மக்கள் பணி, ஆலயப்பணி, பொதுப்பணி போன்ற பல சேவைகள் என்றென்றும் எம்மால் மறக்கமுடியாது. அப்பணிகள் அவரின் பெயரை நினைவு படுத்திக் கொண்டேயிருக்கும்.

நயினை நா.க.குமாரசூரியர் ஜே.பி
முன்னாள் அஞ்சலதிபர், நயினாதீவு.

## இல்லற வாழ்வின் பொன்விழா நிறைவின் வாழ்த்துக்கள்



### திரு.திருமதி தனசிங்கம் தம்பதிகள்

இல்லற வாழ்வில் இனிதே இணைந்து குறைவில்லா செல்வங்கள் அனைத்தையும் பெற்று பொன்விழாக்காண அருள் புரிந்த இறைவனைப் போற்றிப் புகழ்பாடி ஆராதனை செய்கின்றோம். இறை பராமரிப்பு என்றென்றும் நிலைத்திட நீடுமகிழ்வும் நிறைந்த நற்சுகமும் கலந்த நல்வாழ்வு சிறந்தே பெற்று நீவிர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்

வாழ்க! வாழ்க!

வாழ்த்துவோர்:
PATRICIAN INSTITUTES
அலுவலர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், தொழிலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சதிருக்குப் பின்னரான பரதநாட்டிய வளர்ச்சி

மேலும் நாட்டியக் கலையில் ஆர்வங் கொண்டு இலங்கைக் கலைஞர்கள் பலர் இந்தியா சென்று அங்குள்ள பழம் பெருங்கலைஞர்களான ருக்மணிதேவி அருண்டேல், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மயிலாப்பூர் கௌரி அம்பாள், பாலசரஸ்வதி, வழுவூர் ராமையாபிள்ளை போன்றோரிடம் பரதக் கலையை முறைப்படி கற்றுப் பட்டம் பெற்று ஈழநாட்டிலே வந்து பணிபுரிந்து வந்தனர். அந்தவகையில் இணுவிலைச் சேர்ந்த ஏரம்பு சுப்பையா அவர்கள் இந்தியாவிற்கு பல தடவைகள் சென்று திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பரதத்தையும், குருகோபிநாத்திடம் கதகளியையும் கற்று வந்தார். அத்துடன் தனது சிறு பிராயத்திலேயே தந்தையாரிடம் கிராமிய நடனங்கள் கற்றதன் பயனாக 1956லே கொக்குவிலில் 'கலாபவனம்' நாட்டியப்பள்ளியை நிறுவினார். கலாபவன மாணவ சந்ததி உலகம் பூராகவும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் முக்கியமாக ஈழநாட்டில் பெண்கள் பரதக்கலையை கற்க வேண்டும் என்ற ஆதங்கத்தால் பல பெண் பரதநாட்டிய தாரகைகள் தோன்றக் காரணமாயிருந்தவர். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் , இணுவில் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் பரதக்கலை கற்பித்தார். தன்னுடைய காலத்தில் பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வெற்றி கண்டவர். இலங்கையின் பரதக்கலை வளர்ச்சிக்குப் பெரும் திருப்புமுனையாக அமைந்தவர்.

இவரைத் தொடர்ந்து இலங்கையில் இருந்து முதன்முதலில் சர்வதேசக் கலைக்கூடமான அடையாறு கலாஷேத்திராவிலே சென்று பட்டம் பெற்று வந்தவர் செல்வி கமலா புருடி ஆவார். தொடர்ச்சியாக வீரமணி ஐயர், செல்வி சாந்தா பொன்னுத்துரை, திருமதி லீலாம்பிகை செல்வராஜா, திருமதி கௌரி சிவசுப்பிரமணியம் இன்னும் பலரைக்குறிப்பிடலாம். அதுபோல வழுவூர் இராமையா பிள்ளையிடம் திருமதி திரிபுர சுந்தரி யோகாணந்தம், திருமதி கார்த்திகா கணேசர் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் 20 ஆம் நூற்றாண்டின் மத்திய மற்றும் பிற்பகுதியில் இந்தியாவின் தமிழ்நாட்டிற்குச் சென்று கலை பயின்று பின் ஈழநாட்டில் சேவையாற்றி வந்தவர்கள் இந்த இடத்தில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் பங்களிப்பும் சிறப்பாகக் கூறப்பட வேண்டிய ஒன்றாகும். 1953 இல் இவர் இந்தியா சென்று நாட்டியம் மற்றும் இசையினைக் கற்று வந்ததன் பின்னர் மட்டக்களப்பு அரசினர் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி , மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி போன்றவற்றில் இசை, நடன ஆசிரியராகவும் பலாலி, கொழும்புத்துறை, கோப்பாய், நல்லூர், மட்டக்களப்பு போன்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இசை, நாட்டியப் போதகராகவும் இராமநாதன் நுண்கலைக் கழக வருகை விரிவுரையாளராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முதல்தர எழுதுநராகவும் நாட்டிய நாடகத் தயாரிப்பாளராகவும் நெறியாளராகவும் சிறப்பான சேவையாற்றி 30 இற்கும் மேற்பட்ட விருதுகளையும் தனதாக்கி 100 இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களைத் தயாரித்து அவற்றில் பலவற்றிற்குத் தாமே நாட்டிய அமைப்புச் செய்தார். பல கீர்த்தனைகள், திருவூஞ்சல்கள், திருப்பள்ளியெழுச்சிகள் போன்றவற்றை எமக்குத் தந்தவர். இவரது பணிகள் யாழ்ப்பாணத்து பரதநாட்டிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும், 20 ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த அனுபவம் வாய்ந்த நாட்டியக் கலைஞர்களாக நாட்டிய கேசரி வி.இராசரத்தினம், கீதாஞ்சலி, வே.க.நல்லையா, வேல் ஆனந்தன், திருமதி விமலா யோகநாதன், திருமதி லீலா ஆறுமுகையா, ய.தொம்மக்குட்டி, திருமதி பத்மரஞ்சினி, உமாசங்கர் போன்றவர்களையும் குறிப்பிடலாம். இவர்களில் வேல் ஆனந்தன் கதகளிக்கலைஞராக இருந்து பல புதிய முயற்சிகளை மேற்கொண்டவர். ஈழ நாட்டியம் உருவாக்குவதற்கு புரட்சிகர முயற்சிகளை மரபு மீறாது மேற்கொண்டவர். இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆலய விழாக்கள்,நிதி சேகரிப்பு நிகழ்வுகள், கலை விழாக்கள் போன்றவற்றில் பரதக்கலை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. 1960 களில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை நிதி சேகரிப்புக்காக சிங்களக் கலைஞர் செல்வி பத்மினி தவரநாயக்கவின் நாட்டியக்கச்சேரி இடம்பெற்றது. வண்ணை பிள்ளையார் ஆலய கட்டட நிதிக்காக இடம்பெற்ற நாட்டிய நிகழ்வு [1969] கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய கட்டட நிதிக்காக கொக்குவில் கலாபவனத்தினரின் நாட்டிய நிகழ்வும் [1972] ஆரம்ப காலங்களில் இடம்பெற்ற நடன நிகழ்வுகளாகக் குறிப்பிட்டுக் கூறலாம். அதுபோல பல அரங்கேற்ற நிகழ்வுகளும் சமகாலத்தில் இடம்பெற்றன. (தொடரும்)



உ.உமாமகேஸ்வரி (B.F.A) மானிப்பாய்.

# நல்லூர் முருகன் தெய்வீக இசையரங்கு நிகழ்வு

இ.கு.சர்மா

வருடம் தோறும் நல்லூர் முருகன் உற்சவ காலத்தின்போது இளங்கலைஞர் மன்றத்தினரால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு மிகவும் பாராட்டத் தக்கதாக அமைந்துள்ளது. இளங்கலைஞர் மன்றத்தின் ஆரம்பகால செயலாளராக இருந்த பொன். சுந்தரலிங்கம் அவர்களால் நல்லூரில் உற்சவகாலங்களில் முருகன் அடியார்களும் இசை ஆர்வலர்களும் இளம் பாடகர்களும் மூத்த கலைஞர்களும் பங்கு கொண்டு மகிழ்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத்தெய்வீக இசைவிழா நிகழ்வு தொடர்ந்து பல ஆண்டுகளாக சேவை ஆற்றிவருவது எல்லோராலும் வரவேற்கப்பட்டதாக அமைந்துள்ளது.

தெய்வீக இசையரங்கில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் இங்கு தமிழ் கீர்த்தனங்கள் பாடப்படுகின்றன. முருகப் பெருமான் மீது பாடப்பட்ட சாகித்தியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. எல்லா நிகழ்வுகளும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் நிறைவு செய்யப்படுகின்றன. இளங்கலைஞர்களுக்கும் மூத்த கலைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

இவ் ஆண்டு நடைபெற்ற தெய்வீக இசையரங்கு நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை மாறி மக்கள் பட்ட துயரங்கள், இழப்புக்கள், பயப்பீதிகள் யாவற்றையும் சிறிய நேரமாவது மறந்து இசையின் மூலம் மனத்தினைச் சாந்தப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. முதல் சில தினங்கள் இளங்கலைஞர்கள் நிகழ்வுகளும்,மஞ்சத்திருவிழாவின் பின்னர் மூத்த கலைஞர்களும் பங்கு கொண்டு இசை நிகழ்வினை வழங்கினர்.

எஸ்.குமாரசாமி அவர்களின் இசைநிகழ்வு சீர்காழி.கோவிந்தராஜனின் மெருகில் அமைந்தது. திருக்கார்த்திகை உற்சவ தினம் செல்வி பரமேஸ்வரி கணேசன் மிகவும் இனிமையாக யாவரும் பாராட்டக் கூடியதாக பாடினார்.

கைலாய வாகனத் திருவிழாவன்று திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் இசை நிகழ்வு மிகவும் தரமானதாக அமைந்தது. அவர் சவேரி ராகத்தில் பாடிய ''முருகா முருகா என்றால் உருகாதோ'' என்ற கீர்த்தனம் மிகச் சிறப்பாக இருந்தது. அவருக்கு அணிசெய் வயலின் வாசித்த கலைஞர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா அவர்கள் மிகவும் உறுதுணையாக மெருகூட்டி வாசித்தமையினை ரசிகர்கள் பாராட்டினர்.

தங்கரதத் திருவிழாவன்று மூத்த கலைஞர் எல்.திலகநாயகம் போல் அவர்களின் இசை நிகழ்சியில் தர்பார் ராக ஆலாபனை சிறப்பாக அமைந்தது. சிந்து பைரவி ராக தில்லானா நன்றாக இருந்தது.

(தொடரும்)



# வாரவசந்தம்

## சூரியன் சிவப்பதேன்

உதய மலர்,

மத்தியான நேரத்தில் வெள்ளை நிறமாகக் காட்சியளிக்கும் சூரியன் உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சிகப்பு நிறமாகத் தோன்றுவது ஏனென்று தெரியுமா?

பூமி சுழன்றபடி சூரியனைக் சுற்றுவதால் பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் எல்லா நேரமும் ஒரே அளவாக இருப்பதில்லை. உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் உள்ள தூரம் மத்தியானத்தில் உள்ள தூரத்திலும் பார்க்க ஐம்பது மடங்கு அதிகம்.

ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள்,செம்மஞ்சள், சிகப்பு ஆகிய ஏழு நிறங்களும் சேர்ந்தே சூரிய ஒளி வெள்ளையாகத் தோன்றுகிறது. இவற்றுள் சிகப்பு நிறம் தெறிப்படைவதில்லை. மற்றைய நிறங்கள் விரைவில் தெறிப்படையும் தன்மையானவை. ஊதா நிறம் மிகவிரைவில் தெறிப்படையக் கூடியது. உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சூரியக் கதிர்கள் நீண்டதூரம் பயணம் செய்கின்றன. இந்த நீண்ட பயணத்தின் போது வளிமண்டலத்தில் இருக்கும் தூசி, புகை, நீராவி போன்றவற்றால் மற்றைய நிறங்கள் தெறிப்படையச் சிகப்பு நிறமே எங்கள் பார்வைக்கு எட்டுகிறது. இதனாலேயே உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் சூரியன் சிகப்பு நிறமாகத் தெரிகின்றது. ★

# தாயின் மகிமை

ரம்ஜா இராசமோகன், கல்வயல், சாவகச்சேரி.




'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்ற சான்றோர் வாக்கிற்கிணங்க தாயானவள் போற்றப்படுகின்றாள். ஒவ்வொரு உயிருக்கும் மூலகாரணமாக விளங்குபவள் தாயே ஆவாள். ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை ஒவ்வொருவரும் பிறந்தவுடன் உச்சரிக்கும் வார்த்தையே அம்மாதான். ஒரு குழந்தையை எடுத்துக்கொண்டால் அந்தக் குழந்தையை பெற்றுக்கொள்வதற்கு தாய் பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டி, சீராட்டி எம்மை வளர்ப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகின்றாள்.

எமக்கு உணவு ஊட்டுவதிலிருந்து அறிவூட்டுவதுவரை எல்லாவற்றையும் அளிப்பது தாயே. இதனைக் கருத்திற்கொண்டு சான்றோர்கள் பலர் பெற்ற தாயின் பெருமையையும் மகிமையையும் பாராட்டியுள்ளனர். பத்து மாதம் கருவில் எம்மை வைத்து சுமந்து பெற்றெடுத்தவள் தாயே. ஒவ்வொருவரும் தங்கள் தாயை மதித்து நடக்கவேணும். எம்மை நல்ல பழக்கவழக்கங்களுடையவர்களாக வளர்த்தெடுப்பவர் என்றால் எமது பெற்றோரே. அதிலும் எம்மை அரவணைத்து அறிவுரை கூறுபவர் தாய் என்றால் மிகையாகாது. எம்மை எடுத்துக்கொண்டால் நாம் பாடசாலை போகும்போது காலை உணவு தந்து நேரத்திற்கு பாடசாலைக்கு அம்மாவே அனுப்பி வைப்பவர். ஏன் பழைய கவிஞர்களை எடுத்துக்கொண்டால் பாடல்களிலே அவர்கள் கூட தாயின் மகிமையைப் பாடினார்கள். அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே... என தாயின் மகிமையை கூறுகின்றனர். அதாவது பசுக் கன்றைப் பார்த்தால் எவ்வளவு பசுக்கள் நின்றாலும் அதற்குள் தனது தாய் நிற்பதைக் கண்டு வாலைக் கிளப்பிக்கொண்டு அம்மா என்று அழைத்தவாறு ஓடுகின்றது. பசுகூட தனது கன்றை அழைத்தவாறு ஓடுகின்றது பார்த்தீர்களா? எனவே நாம் தொட்டிலில் ஆடுவது முதல் பெரிய மனிதராகி நடமாடுவது வரை சகல தேவையையும் நிறைவேற்றுபவள் அம்மாவே. இவ்வாறு அன்போடும் பாசத்தோடும் அரவணைக்கும் தாயை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. சுடுகாடு செல்லும் வரை தாயின் பெருமையையும் மகிமையையும் என்றென்றும் போற்றுவோமாக. ஆகவே, எல்லா உறவுகளையும் விட தாயின் உறவுப் பாசம் தான் மேலான பாசம். ஆயிரம் தான் உறவுகள் இருந்தாலும் அம்மாவின் பாசத்திற்கு ஈடாகுமா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்துக்கு வறுமை தடைக்கல் அல்ல; திடமான உழைப்பு முன்னேற்றத்துக்கு வழியமைக்கும்

## இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் உரை

அச்சுவேலி, ஒக.29

முன்னேற்றத்துக்கு வறுமை ஒரு தடைக்கல் அல்ல. இலட்சிய வேட்கையுடன் கூடிய முயற்சியும் திடமான உழைப்பும் நாம் எதிர்பார்த்தமாதிரி முன்னேற வழிசமைக்கும்.

மக்களின் பொருளாதார ரீதியிலான முன்னெடுப்புக்களுக்கு கைகொடுக்க நாட்டின் சிரேஷ்ட வங்கியாகிய இலங்கை வங்கி மக்களின் வதிவிடங்களை நோக்கி வருவதை மக்கள் உரியமுறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

இவ்வாறு கூறினார் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப்பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம்.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமத்தை இலங்கை வங்கி எழுச்சிக் கிராமமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வும் விளையாட்டு விழாவும் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டு அரங்கில் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உதவிப் பொதுமுகாமையாளர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை வங்கி மக்களின் இருப்பிடம் தேடி வந்து உதவி செய்கின்ற நிலை வங்கியின் வாடிக்கையாளர் மத்தியில் நல்லதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தி இருப்பதோடு பொருளாதார ரீதியிலும் சமூக முன்னெடுப்புக்களிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கி எழுச்சிக் கிராமங்களை உருவாக்கும் செயற்பாட்டை முன்கூட்டியே பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் காலம் தாழ்த்திவிட்டோம் என நான் கவலை கொள்கின்றேன்.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையின் அதீத வளர்ச்சி முகாமைத்துவத்தின் முன்னேற்றத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றது.

வங்கி முகாமையாளர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

முன்னேற்றத்துக்கு வறுமை தடை அல்ல. இதனை எனது வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே கூறுகின்றேன். இலட்சிய வேட்கையுடன்கூடிய முயற்சியும் திடமான உழைப்பும் முன்னேற வகை செய்யும்.

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையின் இரண்டாவது எழுச்சிக் கிராமமாகப் பொறுப்பேற்கப்பட்டிருக்கும் இந்தக் கிராம வளர்ச்சிக்கான வளங்கள் அனைத்தையும் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது- எனக் கூறினார்.

வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றும்போது:-

காலங்கள் மாறலாம், கோலங்கள் மாறலாம் நாங்கள் எமது தனித்துவத்தை இழக்காமல் உழைப்பால் உயரவேண்டும்.

மக்களின் உயர்வுக்கான வளமான திட்டங்களையும் அதற்கான பொருளாதார வளத்தையும் வழங்குவதற்கு இலங்கை வங்கி முன்வந்திருக்கின்றது.

நேர்மையுடன்கூடிய உழைப்பு நாம் எதிர்பார்த்த உயர்வைத் தரும்.

அந்த வகையில் ஜனசக்தி கிராமத்துக்கு பலமான எதிர்காலம் உண்டு. மனஉறுதி மிக்க கலை வளம் கொண்ட சமூகம் என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்- எனக் கூறினார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்சுவேலி அமைப்பாளர் எம்.தர்மராசா உரையாற்றும்போது:-

யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களைத் திட்டமிட்ட முறையில் கட்டியெழுப்ப வேண்டும்.

அந்தவகையான முயற்சிகள் முன்னெடுப்புக்களுக்கு எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னுரிமை அடிப்படையில் உதவி வருகின்றார்.

உங்களது தேவைகள் தொடர்பாக எமது கவனத்துக்குக் கொண்டுவந்து நிறைவு செய்து கொள்ளலாம் - எனக் கூறினார்.

'கெயர்' சர்வதேசம் இணைப்பாளர் சி.ருவேந்திரா இலங்கை வங்கி அச்சுவேலி முகாமையாளர் த.புவனேந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(203-11)


# பீமரத சாந்தி விழா வாழ்த்து
## (70ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா)



அச்செழு பிள்ளையார் அம்மன் ஆலயம்
ஸ்ரீ வத்ஸ கோத்திரம்
பிரம்மஸ்ரீ கு.சிதம்பரேஸ்வர சர்மா
ஜெயலட்சுமி அம்மா தம்பதியர்
பீமரத சாந்தி வைபவமும், தேவி தோத்திரப் பாமாலை சிறப்பு நூல் வெளியீடும் 30.08.2009 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதால் இவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகர் அம்பாள் பாதங்களைப் பணிகின்றோம்.

அன்பிற்குரிய
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
அச்செழு.

(சி/560504)


# உயர் கல்வித்துறையை 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றாற்போல் தகுதியாக்கும் பெருமுயற்சி

## யாழ்.பல்கலையில் உலக வங்கி நடத்தும் கருத்தரங்கு

கொழும்பு, ஒக.29

அண்மையில் உலக வங்கி வெளியிட்டுள்ள இலங்கையில் உயர்கல்வி தொடர்பான அறிக்கை தொடர்பான கருத்தரங்கொன்றை உலக வங்கியின் இலங்கையிலுள்ள அலுவலகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தவிருக்கின்றது.

கற்கையின் கோபுரங்கள், செயற்பாடுகள், இலங்கையில் உயர் கல்வியின் உறுதிப்பாடுகள் மற்றும் ஆபத்துக்கள் என்ற தலைப்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையானது திறமைமிக்க, தொழில்நுட்பரீதியில் தகுதியான, மற்றும் அறிவொளி பெற்ற சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு வழிசமைக்கும் உயர்கல்வித் துறையொன்று அவசியம் என்பதையும் அதுவே மோதலில் சிதைந்து போயுள்ள இலங்கை நாட்டை அமைதியுடன் கூடிய செழிப்புள்ள நாடாக மாற்றி அமைக்க உதவுவதாய் இருக்கும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

மத்தியதர வருமானத்தைக் கொண்ட ஒரு நாட்டுக்குத் தேவையான மட்டத்திலிருந்து தற்போதைய உயர்கல்வித் துறையானது பொருளாதாரம் மற்றும் தரத்தன்மைகள் விடயத்தில் கணிசமான அளவு கீழ் நிலையிலேயே காணப்படுகின்றது. செழிப்பான மத்திய தர வருமானமுள்ள நாடாக வளர்வதற்கு இலங்கையைப் பொறுத்தவரை தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் வளர்ச்சி, பொறியியல், தொழில் வளர்ச்சி, வங்கித்துறை, நிதித்துறை, மற்றும் காப்புறுதித்துறை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அறிவு சார்ந்த துரித நடவடிக்கைகளே முக்கியத்துவம் பெறுகின்றன என்று அவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளதுடன் இந்த நிலையிலேயே உயர்கல்வி நிறுவனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது.

நவ உலக பொருளாதார அறிவுத் தேவைகளை எதிர்கொள்வதற்கு இலங்கை தனது உயர்கல்வி அமைப்பை மேம்படுத்திக் கொள்ள உதவுவதற்கு உலக வங்கியின் 21ஆம் நூற்றாண்டுத் திட்டத்துக்கான உயர்கல்வி ஆலோசனையில் உறுதியுளிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையில் தேசிய தகுதி காண் வரைவமைப்பொன்றை நிறுவுவது, கல்வி நிறுவனங்களுக்கான தகுதியை உறுதி செய்யும் பொறிமுறையொன்றை உருவாக்குவது, பட்டதாரி மாணவர்களின் தொழில்களில் அமர்தல் போன்ற தகுதிகளை மேம்படுத்தும் வகையில் பல்கலைக்கழகங்களில் வசதி வாய்ப்புகளை உருவாக்குவது, மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில அறிவை வலுப்படுத்துவதும் இதில் அடங்கும், சமூகத்துடனான பிணைப்புகளை வளர்த்தல் மற்றும் தொழில்சார் உயர்கல்விக்கான வசதிகளை விரிவாக்கல் போன்ற அம்சங்களில் உதவியளிக்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நூலகக் கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 முதல் 12.30 வரை நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி மாலினி பீரிஸ், யாழ். பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், பல்கலைக்கழகங்களின் மானியக் குழுதலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க, உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைத் தீவுகளுக்கான வதிவிட பணிப்பாளர் திருமதி நாஓகோ இஷீ மற்றும் முதுநிலை பொருளியலாளர் ஹர்ஷா அத் துருப்பான போன்றவர்கள் உரை நிகழ்துவார்கள் (ப)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
விவசாய பீடம்
விரிவுரைகள் ஆரம்பம்

31.08.2009 அன்று ஆரம்பமாகவிருந்த முதலாம் (1201), இரண்டாம் (2201), மூன்றாம் (3101), நான்காம் (4101) வருட மாணவர்களுக்கான அரையாண்டின் இரண்டாவது பகுதிக்குரிய விரிவுரைகள் (07.09.2009) அன்று ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றேன்.

27.08.2009 பதிவாளர்.



உ

விநாயகர் துணை ஸ்ரீ கந்தசுவாமி பைரவர் துணை

# விவாக சோபன சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சர்வமங்கள விரோதி வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் நாளை (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை தசமித் திதியும் மூல நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய முற்பகல் 10 மணி முதல் 11 மணிவரையுள்ள துலா லக்ன மங்கள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| அச்சுவேலி வடக்கு, குருக்கள் வளவு<br>கௌதம கோத்திரம்<br>சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் நப்தரனும்<br>சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களின் பௌத்திரனும்<br>சிவஸ்ரீ விருத்தகிரீசக் குருக்களின் குமாரனுமாகிய<br>**சிரஞ்சீவி கஜேந்திர சர்மா**<br>என்கின்ற வரனுக்கு | நுணாவில் மத்தி, பைரவர் கோயிலடி<br>பாரத்வாஜ கோத்திரம்<br>பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சர்மாவின் நப்த்ரியும்<br>பிரம்மஸ்ரீ சாம்பசிவ சர்மாவின் பௌத்திரியும்<br>பிரம்மஸ்ரீ பரமேஸ்வர சர்மாவின் குமாரத்தியுமாகிய<br>**சௌபாக்கியவதி வைஷ்ணவி**<br>என்கின்ற கன்னிகையை |

கன்யாதான மாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்து கொள்வதாய் பெரியோர்கள் நல்லாசியுடனும் உலவிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர், நுணாவில் ஸ்ரீ கந்தசுவாமி, பைரபர் திருவருளுடனும் நிச்சயித்து முகூர்த்தம் சாவகச்சேரி நுணாவில் மத்தி ஸ்ரீ கந்தசுவாமி பைரவராலய மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளதால் தாங்கள் பந்துமித்ர குடும்பசமேதராய் வருகைதந்து திருமணத் தம்பதியினரை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்:

இன்று (29.08.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

வதூவரகிரகப்பிரவேசம்:

நாளை (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| சிவஸ்ரீ வை.விருத்தகிரீசக் குருக்கள் சரோஜினி தம்பதியர்,<br>குருக்கள் வளவு,<br>அச்சுவேலி வடக்கு,<br>அச்சுவேலி. | ஸ்ரீமதி பரமேஸ்வர சர்மா தர்மாம்பாள்,<br>பைரவர் கோயிலடி,<br>நுணாவில் மத்தி,<br>சாவகச்சேரி. |

(சி/560502)

(இரு வீட்டார் அழைப்பு)



உடனடியாக தேவை

# கட்டிட நிர்மாண பொருட்களை விநியோகிப்பதற்கு நாடெங்கும் முகவர்கள் தேவை.



நாம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்தரத்திலான குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து நாடெங்கும் விநியோகிக்கும் ஒரு முன்னணி நிறுவனமாகும்.

எதிர்காலத்தில் எங்கள் நிறுவனத்தின் மூலம் இத்தாலியின் ISO, TUV மற்றும் UNI-EN தரச்சான்றிதழ்களை பெற்ற குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

இத்தயாரிப்புகளை நாடெங்கும் விநியோகம் செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

உங்கள் முழுமையான விண்ணப்பப்படிவத்தை கீழுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

www.sansu.lk

**The Advertiser**
**651/31, Elvitigala Mawatha, Colombo 05.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் வழங்கியதன் மூலம் ஈழத்தமிழருக்கு எதிராகவே இந்திய அரசு செயற்பட்டுள்ளது!

## அமைச்சரின் பேச்சு வியப்பளிக்கிறது என்கிறது பா.ஜ.க.



சென்னை, ஓக. 29

ஆயுதங்கள் வழங்கியதன் மூலம் மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவே செயற்பட்டுள்ளது - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் இல.கணேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

"இலங்கைக்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது உண்மை" - என்று பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு பேசியிருப்பது வியப்பாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நமது இராணுவத்திற்கு சக்தி வாய்ந்த 'பீஷ்மா டாங்கிகளை' தயாரித்தளித்து நாட்டுக்கு பெருமை சேர்த்திருக்கிறது சென்னை ஆவடி கனரக வாகன தொழிற்சாலை. இது பாராட்டுக்குரிய செயல்.

பீஷ்மா டாங்கிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கும் விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜு, "இலங்கைக்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது உண்மை. ஆனால், அவை இலங்கையின் தற்காப்புக்காக வழங்கப்பட்டதே தவிர, தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்த அல்ல'' என்று பேசியிருக்கிறார்.

இலங்கைக்கு எந்த எதிரி நாடும் இல்லை. அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குமானால் அவை பாரதத்திற்கு எதிராக பயன்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால், இலங்கைக்கு இந்தியாவால் வழங்கப்படும் ஆயுதங்கள் எந்த நாட்டிற்கு எதிராகப் பயன்படப் போகின்றன?

விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுவதாகக் கூறிக்கொண்டு இலங்கையால் ஏவப்படும் இந்த ஆயுதங்கள் அங்குள்ள அப்பாவித் தமிழர்களை நோக்கித்தான் பாய்கின்றன. இந்த அடிப்படை விடயம்கூட தெரியாமல் அமைச்சர் பேசியிருப்பது வியப்பாக இருக்கிறது.

தங்களை தற்காத்துக் கொள்ள ஒன்று, எதிரிகளை தாக்க ஒன்று என இரண்டு ஆயுதங்களை இராணுவத்தினர் எடுத்துச் செல்வதில்லை.

தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டிய மத்திய காங்கிரஸ் அரசு, தமிழர்களுக்கு எதிராக செயற்பட்ட இலங்கைக்கு ஆதரவாகவே செயற்பட்டுள்ளது என்ற உண்மை தற்போது அம்பலமாகியிருக்கிறது - என்றார்.

# தமிழகத்தில் புலிகளைக் காக்க மத்திய அரசு தீவிர பிரயத்தனம்

தமிழகத்தில் புலிகளைப் பாதுகாக்கவும், புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மத்திய அரசின் புதுமுயற்சியாக 'டைகர் பவுண்டேஷன்' என்னும் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக வனத்துறை செயலர் தேபேந்திரநாத் சாரங்கி நேற்று கூறியவை -

இந்தியாவில் பல மாநிலங்களில் புலிகள் அழிந்து வரும் நிலையில் தமிழகத்தில் மட்டும் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்தபடி உள்ளது. தமிழகத்தில் தற்போது 76 புலிகள் இருக்கின்றன என கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், மற்ற மாநிலங்களின் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவது அரசை வருத்தமடையச் செய்துள்ளது.

அதற்காக, அழிந்து வரும் விலங்கினங்களை காப்பதற்காக புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. ஒரு இடத்தில் புலிகள் வசித்தால், அந்த இடத்தில் மற்ற வனவிலங்குகளும், இதர உயிரினங்களும் அதிகம் வாழ்வதாக எடுத்துக் கொள்ளலாம். புலிகளை காப்பதற்காக 'டைகர் பவுண்டேஷன்' என்னும் புதுத்திட்டத்தை உருவாக்கி மத்திய அரசு செயற்படுத்தி வருகிறது - என்றார்.

# கச்சதீவில் மீன்பிடிக்க அனுமதி கோரி செப். 3 இல் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

இராமேஸ்வரம், ஓக. 29

கச்சதீவுக் கடற்பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை மத்திய, மாநில அரசுகள் மீட்டுத் தர வேண்டும். இல்லாவிட்டால் வரும் 3ஆம் திகதி ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் - என்று 5 மாவட்ட மீனவர்கள் ஒருமித்த குரலில் அறிவித்துள்ளனர்.

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி கோரி இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்ட மீனவர்கள் கடந்த 21ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, 5 மாவட்ட விசைப் படகு மீனவர்கள், மீனவர்கள் சங்கத் தலைவர் போஸ் தலைமையில் இராமேஸ்வரத்தில் கடந்த புதன்கிழமை உண்ணாவிரதம் இருந்தனர். இதன்முடிவில், பாரம்பரியமான கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை மத்திய, மாநில அரசுகள் மீட்டுத் தரவேண்டும். இல்லாவிட்டால் செப்டம்பர் 3ஆம் திகதி ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# மஹிந்த, சரத் மீது போர்க்குற்ற வழக்கு தொடர 'சனல்- 4' வீடியோவே போதும்

## வேறு ஆதாரம் தேவையில்லை எனக் குமுறுகிறார் ராமதாஸ்





திண்டிவனம் ஓக. 29

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி பொன்சேகா ஆகியோர் மீது போர்க்குற்ற வழக்குகள் தொடர்வதற்கு பிரிட்டனைச் சேர்ந்த 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோக் காட்சியைத் தவிர வேறு ஆவணங்கள் தேவையில்லை.

சிங்களப் படையினரின் அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து 'சனல்-4' திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளது. எனவே, இந்த ஆதாரங்களைக் கொண்டு இவர்கள் மீது போர்க்குற்ற வழக்குகள் தொடரவேண்டும்.

- இவ்வாறு பா.ம.க.வின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கைப் படையினரின் அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து பிரிட்டனைச் சேர்ந்த 'சனல்-4' தொலைக்காட்சி திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளது.


இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி பொன்சேகா ஆகியோர் மீது போர்க்குற்ற வழக்குகள் தொடர்வதற்கு இது தவிர வேறு ஆவணங்கள் தேவையில்லை.


இந்த ஆதாரங்களைக் கொண்டு இவர்கள் மீது போர்க்குற்ற வழக்குகள் தொடரவேண்டும்.

சமச்சீர் கல்வி அமுலாக்கம் குறித்து முதல்வர் கருணாநிதியின் அறிவிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி நீர்க்குமிழி போல் விரைவிலேயே கலைந்துவிட்டது. ஒரே பாடத் திட்டம், ஒரே விதமான பாட புத்தகங்கள் என்பனவற்றால் அனைவருக்கும் சமச்சீரான கல்வியை வழங்க முடியாது. அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான, சீரான, ஒரே விதமான கல்வியை வழங்குவதுதான் சமச்சீர்க் கல்வி. அதற்கு இது வழிவகுக்காது.

பயிற்று மொழியாக தமிழும், தற்போது நடைமுறையில் உள்ள பிற மொழிகளும் தொடரும் என்று அறிவித்திருப்பது சமச்சீர்க் கல்வி என்ற நடைமுறைக்கு வேட்டு வைப்பதாகும் - என்றார்.

# நடிகர் விஜய் காங்கிரஸில் இணைவதை வரவேற்கின்றோம் என்கிறார் தங்கபாலு





சென்னை, ஓக. 29

நடிகர் விஜய், காங்கிரஸ் கட்சியில் இணைவதை இன்முகத்துடன் வரவேற்கிறோம் - என்று காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் கே.வி. தங்கபாலு தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களுக்கு கே.வி.தங்கபாலு பேட்டியளித்த போதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நடிகர் விஜய், காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியை சந்தித்தது பற்றியும், காங்கிரஸ் கட்சியில் அவர் சேரப்போவது பற்றியும் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளையும், சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரின் தலைமையையும் ஏற்றுச் செயற்படும் அனைவரையும் காங்கிரஸ் இன்முகத்துடன் வரவேற்கிறது. இன்று, நாளை மற்றும் எப்போதும் இந்தியாவில் மிகப் பெரிய சக்தியாக ராகுல் காந்தி விளங்குவார். அவரது தலைமையை ஏற்று நிறைய இளைஞர்கள் காங்கிரஸில் இணைகிறார்கள்.

அந்தவகையில் காங்கிரசில் இணையும் அனைவரையும் வரவேற்கிறோம். புதிய நம்பிக்கையாக, இளைஞர் காங்கிரஸ் விளங்குகிறது. காங்கிரஸ், தேசிய இயக்கமாகும். அது அனைவரையும் வரவேற்கும் - என்றார். (ர)

# திருச்சியிலிருந்து போலி டிக்கெட் மூலம் இலங்கை செல்ல முயன்ற இருவர் கைது!

சென்னை, ஓக. 29

போலி விமான டிக்கெட் மூலம் இலங்கைக்குச் செல்ல முயன்ற இரண்டு ஜவுளி வியாபாரிகளை திருச்சி விமான நிலையத்தில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரைச் சேர்ந்த விஜயன் (வயது - 46) மற்றும் காரைக்குடி புதுச்சந்தை கிழத் தெருவில் வசிக்கும் ஜெயபால் (வயது - 36) ஆகிய இருவரும் ஜவுளி வியாபாரம் செய்வதற்காக அடிக்கடி கொழும்பிற்கு சென்று வருவது வழக்கம்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை, திருச்சி விமான நிலையத்திலிருந்து மிகின் லங்கா விமானம் மூலம், கொழும்பிற்குச் செல்ல அவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இருவரின் ஆவணங்களை குடியேற்ற அதிகாரி (பொறுப்பு) ஜெயச்சந்திரன் ஆய்வு செய்தார். அப்போது, கொழும்பு செல்வதற்கான டிக்கெட் மற்றும் கடவுச்சீட்டு சரியாக இருந்தன. ஆனால், திரும்பி வருவதற்கான டிக்கெட் போலியானது என்பது ஆய்வில் தெரிந்தது.

இதனையடுத்து விஜயன், ஜெயபாலை விமான நிலையப் பொலிஸார் கைதுசெய்தனர். மேலும், தலைமறைவான முகவரை பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர்.

# பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் புகுந்த பிரான்ஸ் விமானத்தால் பரபரப்பு

## இந்தியப் போர் விமானங்கள் சுற்றிவளைப்பு

புதுடில்லி, ஓக. 29

இந்திய வான் எல்லைக்குள் புகுந்த பிரான்ஸ் நாட்டுப் பயணிகள் விமானம், தவறான சங்கேத குறியீட்டை அனுப்பியதால் இந்திய போர் விமானங்கள் அந்த விமானத்தை நடுவானில் 2 மணி நேரம் சுற்றி வளைத்தன.

நேற்றுமுன்தினம் காலை 6.10 மணியளவில் பாகிஸ்தான் நாட்டின் லாகூர் பகுதியில் இருந்து பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் வழியாக ஒரு விமானம் திடீரென்று இந்திய வான் எல்லைக்குள் நுழைந்தது.

மேலும் அந்த விமானத்தில் இருந்து இந்திய ராடர்களுக்கு தவறான சங்கேத குறியீடு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதை உடனடியாக இந்திய விமானப்படை ராடர்கள் கண்டுபிடித்து விட்டன.

இதனையடுத்து ஆதம்பூரில் உள்ள விமானப்படைத் தளத்தில் இருந்து இந்திய விமானப் படைக்குச் சொந்தமான மிக் 29 ரக போர் விமானங்கள் இரண்டு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன. இந்திய வான் எல்லைக்குள் புகுந்த அந்த விமானம் சிறிது நேரத்தில் சுற்றி வளைக்கப்பட்டது. அந்த விமானத்தை இயக்கிய விமானிகளிடமிருந்து சரியான தகவலும் கிடைக்கவில்லை.

இதன்காரணமாக தொடர்ந்து இந்திய வான் வெளியில் 2 மணி நேரத்துக்கும் மேலாக அந்த விமானத்தை இந்திய போர் விமானங்கள் மிக அருகில் பறந்தவாறு கண்காணித்து வந்தன. வெகு நேரம் இந்திய வான் வெளியில் வெளிநாட்டு விமானம் முடக்கப்பட்டதால் பரபரப்பான சூழல் நிலவியது.

அதன் பிறகே லாகூர் நகரில் இருந்து இந்திய வான் எல்லைக்குள்ளாக நுழைந்தது பிரான்ஸ் நாட்டு பயணிகள் விமானம் என்பதும், அது பாரீஸ் நகரில் இருந்து பாங்காக் நகருக்குச் சென்று கொண்டிருந்ததும், அந்த விமானம் தவறான சங்கேத குறியீட்டை இந்திய ராடர்களுக்கு அனுப்பி வைத்திருப்பதும் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து பிரான்ஸ் பயணிகள் விமான முற்றுகை தளர்த்தப்பட்டு அந்த விமானம் இந்திய வான் எல்லைக்குள் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. அந்த விமானத்தில் 343 பயணிகள் இருந்தனர்.

# கந்தஹார் விமானக் கடத்தல் விவகாரம்: பச்சைப் பொய் உரைக்கிறார் அத்வானி!

## பிரிஜேஸ் மிஸ்ரா, யஷ்வந்த் சீற்றம்

கந்தஹார் விமானக் கடத்தலின்போது பயணிகளை விடுவிக்க 3 தீவிரவாதிகளை விடுதலை செய்து ஜஸ்வந்த் சிங் கூட்டிச் சென்றது அத்வானிக்கு நன்றாகத் தெரியும்.

- இவ்வாறு அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிஜேஷ் மிஸ்ரா, நிதி அமைச்சராகப் பதவி வகித்த யஷவந்த் சின்ஹா ஆகியோர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பேட்டியளித்தனர்.

கந்தஹார் விமானக் கடத்தலின்போது பயணிகளை விடுவிக்க 3 தீவிரவாதிகளை விமானத்தில் அப்போதைய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தன்னுடன் அழைத்துச் சென்றது தனக்கு எதுவும் தெரியாது என்று அப்போது உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி, 'எனது நாடு, என் வாழ்க்கை' என்ற தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதை அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிஜேஷ் மிஸ்ரா மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் -

அமிர்தசரஸிலிருந்து கந்தஹாருக்கு விமானத்தை தீவிரவாதிகள் கடத்திச் சென்றது தனக்கு தெரியாது என்று அத்வானி கூறுவது பொய். அதேபோல், பயணிகளை விடுவிக்க 3 தீவிரவாதிகளுடன் கந்தகாருக்கு ஜஸ்வந்த் சிங் சென்றது அத்வானிக்கு நன்கு தெரியும். ஏனெனில், தீவிரவாதிகளை ஜஸ்வந்த் சிங் அழைத்துச் சென்று பயணிகளை பத்திரமாக மீட்பது என்பது பாதுகாப்புக்கான அமைச்சுக் கமிட்டி கூட்டத்தில் தான் முடிவு செய்யப்பட்டது. அந்தக் கமிட்டியில் இருந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஜஸ்வந்த் சிங், யஷ்வந்த் சின்கா ஆகியோர், அத்வானிக்கு ஜஸ்வந்த் சிங் காந்தகாருக்கு செல்வது தெரியும் என்று கூறியுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் எடுக்கப்பட்ட மிக கஷ்டமான முடிவு இது. தீவிரவாதிகள் முதலில் 36 தீவிரவாதிகளை விடுவிக்க வேண்டும் என்றும், 20 கோடி டாலர்கள் தர வேண்டும் என்றும் கேட்டனர். பின்னர், பேச்சு நடத்தி 160 பயணிகளை காப்பாற்ற 3 தீவிரவாதிகளை மட்டும் விடுவிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. இதற்கு அத்வானியின் சம்மதமும் பெறப்பட்டது. அது மட்டுமின்றி, அப்போது எல்லாக் கட்சிகளும் அப்போதைய பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து பயணிகளை உயிருடன் மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்குமாறும் கேட்டுக் கொண்டன - என்றார்.

இதேவேளை, மிஸ்ராவின் பேட்டியை யஷ்வந்த் ஆதரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத் தமிழ் இலக்கிய விழா ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில்

வடக்குமாகாண தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மக்களின் விழாவாக இவ் விழா அமைகிறது. எமது கலாசாரம், பண்பாடுகளை எடுத்துக் காட்டும் வகையிலும், எமது இளையதலைமுறையினர் அவற்றைக் கடைப்பிடிக்கக் கூடிய அறிவுரைகளை எடுத்துக் கூறும் வகையிலும் நிகழ்வுகள் இடம் பெறவேண்டும் எனவும் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு எமது பிரதேசத்திற்கு பெருமைசேர்க்க வேண்டும் எனவும் அரச அதிபர் கே. கணேஷ் கேட்டுக் கொண்டார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் மூன்று தினங்கள் இலக்கிய விழா இடம்பெறும். 14ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டுவரை தமிழ் மன்னர்கள், ஈழத்துத் தமிழ் இலக்கியம் குறித்த ஆய்வரங்கில் அரசியல், சமூகம், மொழி, சமயம், பண்பாட்டியல் போன்ற தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப் படும் துறை சார்ந்த அறிஞர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

விழாவில் நவீன நாடகம், இயலிசை நாடகம், குழு நடனம், நாட்டுக் கூத்து போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறும். இறுதி நாளன்று பரிசளிப்பு விழாவும் நடைபெறும். இறுதிநாள் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விழாவையொட்டி தீவுப்பகுதி, யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம்பகுதிகளில் இருந்து வரும் ஊர்திகள் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து பொதுமக்களுடன் ஊர்வலமாக அரசடி வீதி வழியாக விழா மண்டபத்தை வந்து சேரும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு கலை நிகழ்வுகள் விழாவில் இடம்பெறும்எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறையின் உதவிச் செயலாளர் கே. சிவகரன், பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி உட்பட பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், கலைஞர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர். (50-111)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள்- 2008
## கலைமுதற் தேர்வு- 2007&2008 (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 15.09.2009 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 03.10.2009 சனிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.09.2009 வியாழக்கிழமை தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர். 27.08.2009 (சி/560506)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை விஜயரத்தினம்



அராலி கிழக்கு, வாலையம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஜயரத்தினம் 23.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வாலைமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் சபாரத்தினம், தவராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமார் (பிரான்ஸ்), விஜயகுமாரி, ராஜ்குமார் (ஜேர்மனி), விஜயலட்சுமி (பிரான்ஸ்), அன்னகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணநாத முத்துலிங்கஐயா, தர்மகுணதேவி (பிரான்ஸ்), கலைவதனன் (பிரான்ஸ்), றோகிணி (ஜேர்மனி), நடேசினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை மு.ப.11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு முனங்குப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாலையம்மன் கோயிலடி,
அராலி கிழக்கு. (88278)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா சிறிதரன்

(உரிமையாளர், Sritharan Brothers, சமாதான நீதிவான்)



கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய கிராம சேவையாளர் கதிர்காமு பொன்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஆகிய பொன்னையா சிறிதரன் 28.08.2009 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார்பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் குபேரன் (அபுஜான்-தென் ஆபிரிக்கா), லாவண்யா (U.K), சங்கீதா(U.K), அருந்தஷா (சிங்கப்பூர்), விபாகரன் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மிதிலாசினி (அபுஜான்-தென் ஆபிரிக்கா), ரமணன் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனியாவின் அன்புப் பேரனும் பாலசந்திரன், புஸ்பராணி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் குணரத்தினம், மஞ்சுளா, நளாயினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

211/3,De Krester Place,
Colombo-04
தொடர்பு இல: 2598111

தகவல்:
குடும்பத்தினர்.

560095


## தேவை

சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்படவுள்ள போன் கடை ஒன்றிற்கு போட்டோக்கொப்பி மற்றும் கணனித் தட்டச்சு வேலை தெரிந்த பெண்பிள்ளை தேவை.

தொடர்பு:
தொ.பே: 0776145305, 0602212850

## தேவை

1. தட்டச்சாளர் (Typist)
2. கணனி இயக்குநர் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.

கனல் போட்டோ கொப்பிங் சேவிஸ்
மருத்திதுறை
தொ.பே.இல: 021 226 3236 (C/ 560503)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

BAJAJ CALIBAR மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:- மரியதாஸ் கிஷோ அன்ரன், இல, 32/16, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே.இல: 0712827370 (88276)

## கமலக்கண்ணன் திருமணசேவை

1984ஆம் ஆண்டு, 12இல் செவ்வாய், 60½ பாவம் M.Sc படித்த, கனடா பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

1982ஆம் ஆண்டு, செவ்வாய் இல்லாத, 41½ பாவம் Doctor கனடாவில் தொழில்புரியும் பிரஜா உரிமையும் உடைய மணமகளுக்கு Doctor or Engineer, எக்கவுண்டன் மணமகன் தேவை.

1976ஆம் ஆண்டு, 12இல் செவ்வாய் 39¼ பாவமுடைய Doctor மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் பெரியளவில் தேவை இல்லை.

1979ஆம் ஆண்டு, செவ்வாய் இல்லாத பாவம் 86 Chartered Accountant மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

1980ஆம் ஆண்டு, 4இல் செவ்வாய் 29¾ பாவமுடைய அவுஸ்திரேலியா மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

1976 ஆம் ஆண்டு 12 இல் செவ்வாய் 20¾பாவமுடைய கனடா பிரஜாஉரிமை பெற்ற மணமகனுக்குபடித்தஅழகானமணமகள்தேவை

மேலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், பாவம் கூடிய, குறைந்த அரச உத்தியோகத்தர்கள் சுவிஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா, கனடா லண்டன்பிரஜா உரிமைபெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: 171/7, மனோன் மணி அம்மன் கோயிலடி நல்லூர் வடக்கு வீதி [illegible] (88266)


# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

துயிராய் விதையாய்

10 ☆ 07 ☆ 1982 — 06 ☆ 08 ☆ 1992



## செல்வி சர்விழி (கிளி) தம்பிராசா

திதி: நவமி (29.08.2009)

எல்லாம் வல்ல இறைவா!!
எங்கும் நிறைந்த இறைவா!!
காக்கும் கடவுளல்லவா நீ?
கடைசி மகள் கிளியின் மேல்
கண்வைத்த காரணமென்ன?
கணப்பொழுதில் கடந்துவிட்ட 17 வருடங்கள்
எம் மனதில் ஃகுவாக படிந்து விட்டனவே
இத்தனை வருடமென்ன எத்தனை வருடம் கடந்தாலும்
எம் துயரம் ஆறாது - மாறாது.

கோட்டைக்காடு,
மல்லாகம். (88274)

என்றும் நினைவுடன்:
தம்பிராசா குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னுத்துரை 27.08.2009 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், பகீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரிசிகரன், நிர்மலா ஆகியோரின் மாமனும் பார்த்தீபன், ஓவியா, சாதனா, கிறிஸ்ரீனா ஆகியோரின் பாட்டனும் நவரத்தினம், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகசபை (விதானையார், கருகம்பனை), குமரேசப்பிள்ளை (குஞ்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்மயிலைநாதன், அன்னலட்சுமி, காலஞ்சென் றவர்களான வள்ளியம்மை, தங்கரத்தினம் கதிரேஸ் (விதானையார்), பரமேஸ்வரி சிவபாதசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2009 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதி இல்லம்,
கடகப்புலம்,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம் (88275)

தகவல்:
பொ.விக்கினேஸ்வரன்
(விக்கி - பிரித்தானியா).

## விசுவலிங்கம் நாகராசா (பபோ ஐயா)

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் நாகராசா (பபோ ஐயா) 27.08.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாரணியம் விஸ்வலிங்கம் - விஸ்வலிங்கம் தண்டிகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அமரர் தம்பிராஜா (ஓய்வுபெற்ற இலிகிதர்) மற்றும் சுகிர்தாம்பாள், செல்வநாயகம் (ஓய்வுபெற்ற அலுவலர்), இராஜரத்தினம் (ஓய்வுபெற்ற இலிகிதர், தேர்தல்கள் திணைக்களம், அவுஸ்திரேலியா), இராசாம்பிகை, ஜெயராசா (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை சிறுப்பிட்டி மத்தியிலுள்ள மருமகளின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சிறுப்பிட்டி தெற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(88269)

தகவல்:
இ.நந்தினி (மருமகள்).

## திருமதி சூரியகுமார் சந்திரகலா



நாயன்மார் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சூரியகுமார் சந்திரகலா நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம்-அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், சூரியகுமாரின் அன்பு மனைவியும், பிரியாந்தினி (யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ஜனுராம், அபிராமி (சாதனா பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், பஞ்சரத்தினம் (ஜேர்மனி), நடராசா, நவரத்தினம், நாகேஸ்வரி, செல்வராணி, உதயகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29. 08.2009) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

109/3, சட்டநாதர் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (88264)

தகவல்: கணவர்,
பிள்ளைகள், சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி அகதி முகாம்களில் புலிகள் ஊடுருவியுள்ளனர் அங்கு பொதுமக்கள் மத்தியில் தாக்குதல் நடத்தக்கூடும்

## அதனால் நடமாட்ட சுதந்திரம் வழங்குவதில் அவதானம் தேவை என்கிறார் அமைச்சர்



கொழும்பு, ஓக. 29

வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளமையால், அந்த மக்களுக்கு நடமாட்ட சுதந்திரத்தை வழங்குவது குறித்தும் மிகவும் அவதானமாகவிருக்க வேண்டியுள்ளது. ஊடுருவியுள்ள புலிகள் பொதுமக்கள் மத்தியில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தக் கூடும் - என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை குறித்து பிழையான தகவல்களைப் பரப்பும் மேற்குலக ஊடகங்கள் குறித்து அவதானமாகவிருக்க வேண்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ள அமைச்சர் இதுபற்றி மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர்.

விடுதலைப் புலிகள், இடம்பெயர்ந்த மக்கள் போன்ற போர்வையில் மக்கள் மத்தியில் ஊடுருவும் அபாயம் உள்ளதால் நடமாட்ட சுதந்திரம் வழங்கும்போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டியுள்ளது.

**பத்தாயிரம் பேர் விடுவிக்கப்படுவர்**

,அரசு சுமார் 10 ஆயிரம் பொதுமக்களை விசாரணை செய்துள்ளதுடன், அவர்களை விடுவிக்கும் நிலையிலுள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் கைக் குழந்தைகளாவர்.

முகாமில் உள்ள பொதுமக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளனர் என்று எமக்கு நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ளன.

விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை - அவர்கள் அடையாளம் காணப்படும் வரை - நடமாட்ட சுதந்திரத்தை வழங்குவது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டி உள்ளது.

இந்த அபாயத்தை நாங்கள் சாதாரணமாகக் கருத முடியாது. இந்த முடிவை நாங்கள் மிகவும் இலகுவாக எடுக்கவில்லை. இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள் மற்றும் சாதாரண மக்களின் உரிமை என்பவை குறித்து ஆராய்ந்த பின்னரே இது பற்றி தீர்மானித்தோம்.

**பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொள்ளக்கூடும்**

பயங்கரவாதத் தாக்குதலொன்றை மேற்கொண்டு பொதுமக்கள் மத்தியில் பாரிய சேதத்தை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தலாம் என்பதையும் கருத்தில் எடுத்தோம்.

இலங்கை அரசிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் வலையமைப்புகள் குறித்தும் வெளியிடும் பிழையான தகவல்களை பிரசுரிக்கும் மேற்குலக ஊடகங்கள் குறித்தும் இலங்கை அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர் எனத் தெரிவித்து பயங்கர வீடியோ ஒன்றை மேற்குலகில் தொலைக்காட்சியொன்று வெளியிட்டது. இதனை உடனடியாக பல செய்தி ஊடகங்கள் மறு ஒளிபரப்பு செய்தன. பரந்துபட்ட பிரசாரத்தை வழங்கின.

தடைசெய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களின் நிலை குறித்து கடும் சீற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பொய்களை தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றது.

இவை இலங்கை குறித்து பிழையான கருத்தை உருவாக்கி அதன் நண்பர்களிடமிருந்து அதனை தனிமைப்படுத்துவதற்கான முயற்சியாகும்.

மோதலின் உச்சக் கட்டத்தின்போது இவ்வாறான முயற்சிகள் உச்சத்தில் இருந்தன. அதனால் இலங்கைக்கு சர்வதேச மட்டங்களில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

இலங்கை அந்த அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து வெற்றிபெற்றது. இதன் மூலம் சர்வதேச அளவில் எமது தலை தாழாமலிருந்தது - என்றார். (அ)

# பாதாள உலகப் புள்ளிகள் மூவர் மாளிகாவத்தையில் சுட்டுக்கொலை!

## அதிரடிப் படையினருடனான மோதலின் போது

கொழும்பு, ஓக. 29

கொழும்பு, மாளிகாவத்தை, ஜும்மா தோட்டத்தில் நேற்று அதிகாலை 3.15 மணியளவில் பாதாள உலகக் குழுவினருக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் உயிரிழந்தனர் என விசேட அதிரடிப்படையினரின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எம்.எஸ்.சரத் சந்திர கூறினார்.

இந்தத் தாக்குதலில் கொழும்பின் பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான பாஜி என்பவரும் அவரது சகாக்களான ரொஜி மற்றும் சாதிக் ஆகியோரும் கொல்லப்பட்டனர் என்று அவர் கூறினார்.

குறித்த பிரதேசத்தில் கப்பம் அறவிடும் நடவடிக்கையில் பாதாள உலகக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் எனக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். அச்சமயத்திலேயே பாதாள உலகக் குழுவினருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது என விசேட அதிரடிப்படையினரின் கட்டளை அதிகாரி கே.எம்.எஸ். சரத் சந்திர மேலும் கூறினார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்குதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது பாதாள உலகக் குழுவினர் மறைந்திருப்பதற்குப் பயன்படுத்திய சுரங்கப்பாதை போன்ற மறைவிடங்களை கண்டுபிடித்த விசேட அதிரடிப்படையினர் அங்கு ரி - 56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு, 9 மில்லி மீற்றர் துப்பாக்கி ஒன்று கைக்குண்டுகள் ஐந்து போன்ற ஆயுதங்களையும் மீட்டனர்.

# நோயாளர்களுடன் தெல்லிப்பழைக்குச் சென்ற அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து புற்றுநோயாளர்களை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற அம்புலன்ஸின் பிரேக் அறுந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான தில் சாரதி உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்றது.

நேற்றுமுற்பகல் 9.45 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள புற்றுநோயாளர் பிரிவிலிருந்து நோயாளர்களை ஏற்றிக்கொண்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்ற அம்புலன்ஸ் வண்டியின் 'பிரேக்' அறுந்து சாரதியின் கட்டுப்பாட்டை மீறி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த நோயாளர்கள், சாரதி, சிற்றூழியர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்புலன்ஸ் சாரதியான ரி.சௌந்தரநாயகம்(வயது-46), யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றூழியரான ஆர். ஜசிந்தன் (வயது 29), நோயாளர்களான நிஷாந்தன் (வயது 15), சி.சந்திரன் (வயது30), தவபாலநாதன் (வயது 69) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (1-9-78-51)

# ஒன்றாக சேர்ந்துவந்த ஐந்து பெண்களின் தாலிக்கொடிகளை அறுக்க திருடர் முயற்சி

## பட்டப்பகலில் சுன்னாகத்தில் சம்பவம்

வலி.வடக்கு, ஓக.29

சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியில் சென்றுகொண்டிருந்த ஐந்து பெண்களின் தாலிக்கொடிகளை அறுக்க, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் முயற்சி மேற்கொண்டனர்; பெண்களின் சாதுரியத்தால் ஒரு பெண்ணின தாலிக்கொடியுடன் திருடர்கள் ஓடிவிட்டனர்.

சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஏழாலை மயிலணியைச் சேர்ந்த 60 வயதான இராசரெத்தினம் தேவராணி என்பவரின் தாலிக்கொடியே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியில் நடைபெற்ற மரணச் சடங்கொன்றில் கலந்துகொண்டுவிட்டு ஐந்து பெண்கள் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இறங்கி வீட்டுக்கு ஒன்றாகச் சென்றுள்ளார்கள்.

அந்த வேளை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் மிகவும் துணிகரமாக பெண்களின் தாலிக்கொடிகளை பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருபெண்ணின் தாலிக்கொடியை அறுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அவர் நிலத்தில் வீழ்ந்தமையால் தாலிக் கொடி காப்பாற்றப்பட்டது. மூன்று பெண்கள் தப்பி ஓடினர்.

மற்றைய பெண் தனது சுமார் பதினொரு பவுண் பெறுமதியான தாலிக் கொடியை பறிகொடுத்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இந்த துணிகரமான திருட்டுச் சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. (1-86)

# குருநகர் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி

குருநகர், ஓக.29

குருநகர் ·சீநோர் வலைத் தொழிற்சாலையை அண்டிய கடற்பரப்பில் மீன் பிடிக்க மீனவர்களுக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என மீனவர் சங்கங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த கடற்பரப்பில் மீன் பிடிக்கதடை விதிக் [illegible] தெரிவிக்கப் பட்டது. (7-300)

## மரண அறிவித்தல்

### தம்பியப்பா தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், வேலணை)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் தெற்கு வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா தெட்சணாமூர்த்தி நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. மேலதிக விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெருமாள் கோயில் தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி.

# சந்நிதி ஆச்சிரமத்தில் விசேட தெய்வீக அரங்கு

வடமராட்சி, ஓக.29

பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் நடைபெற்று வரும் வருடாந்த திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடத்தி வரும் தெய்வீக நிகழ்வு வரிசையில் இன்று சனிக்கிழமை 'இந்து சமயம் காட்டும் ஆன்மீகம்' என்னும் தலைப்பில் காரை எம்.பி.அருளானந்தம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் சத்தியசாயி நிலையத்தினரின் பஜனையும் 'நாயகநாயகி பாவம்' என்னும் தலைப்பில் சிவத்திரு வே.குமாரசாமி ஐயரின் சொற்பொழிவும் இடம்பெறும்.நாளை மறுநாள் திங்கட்கிழமை 'துணை' என்னும் தலைப்பிலான சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் சொற்பொழிவாற்றுவார். (1-236)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஓக.29

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆறு ஓவர்கள் கொண்ட ஆறு பேர் பங்கு பற்றும் மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் சனிக்கிழமை காலை 8 மணிமுதல் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் 16 அணிகள் பங்கு பற்றுகின்றன. (1-86)

* * *

வலி.வடக்கு, ஓக. 29

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணம்பல் கலைக் கழக உடற்கல்வி அணி.

* வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம். (1-86)

* * *

யாழ்ப்பாணம், ஓக.29

ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யூனியன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் றெட்றேஞ்சல் விளையாட்டுக் கழகம்

* யாழ்ப்பாணம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம்.

(203-86)

## கண்ணீர் அஞ்சலி

அச்சக தொழில் துறையில் முதன்மையாளரும் பாரதி அச்சக உரிமையாளருமான சங்கர் ஐயா அவர்களின் மனைவி

### பூரணபாக்கியம் சங்கர்

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் அச்சகம்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல்நீதிமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூண்கள் மற்றும் அதன் அதன் கூரைப் பகுதிகளே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாகவே இவை உடைந்து வீழ்ந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

இதனால், மேல் நீதிமன்றத்தில் நேற்றைய செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன எனக் கூறப்படுகிறது. (சி)

## அரசியலா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர் ஆங்கில இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு:-

''நான் அரசியலில் வெகு விரைவில் ஈடுபடப் போகிறேன் என்று வெளியாகியிருக்கும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. நான் அரசியலில் ஈடுபடப் போகிறேன் என்று எந்தப் பத்திரிகைகளுக்கும் மின்னஞ்சல் மூலம் அறிக்கைகள் அனுப்பிவைக்கவில்லை. முப்படைகளின் பிரதான அதிகாரியாகப் பொறுப்புடன் உயர் பதவி வகிக்கும் நான் அப்படியொரு அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பும் அளவுக்கு முட்டாள் அல்லன். எனக்கு அரசியலில் பிரவேசிக்கும் எண்ணமோ, நோக்கமோ கிடையாது. எனது பாதுகாப்பு குறைக்கப்பட்டிருக்கிறது என்று வெளியாகியிருக்கும் செய்திகளிலும் உண்மை இல்லை - என்றார்.

## தென்மாகாண..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென் மாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்கும் திகதி யும் நேற்றுடன் நிறைவடைந்தது எனத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சங்குப்பிட்டியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கப்படும். பிரிட்டிஷ் தூதரகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாலம் யாழ்.குடாநாட்டையும் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடுக்க உதவும்.

## மஹிந்தவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் மஹிந்த ராஜபக்ஷவைச் சித்திரித்து இறுவட்டு தயாரிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் புத்தி கீர்த்தி சோ இத்திரைப்படத்தின் தயாரிப் பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அறியவந்தது.

இத்திரைப்படத்திற்கு 90 கோடி ரூபா செலவிடப்படும் என்றும் மேலும் அறிய முடிகிறது.

## 'சனல் 4'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான காட்சிகள் அடங்கிய வீடியோக்களை ஜேர்மனியில் உள்ள ஐந்து சிங்கள விடுதலைப்புலி உறுப்பினர்களே விநி யோகம் செய்துள்ளனர்.

இந்த வீடியோக் காட்சிகள் முழுக்க முழுக்க போலியானவை எனவும் இராணுவத்தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் இவை தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜே.டி.எஸ். எனும் பெயருடைய அமைப்பே இவ்வாறான வீடியோக்களை விநியோகம் செய்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வீடியோக் காட்சிகள் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் புலிகளுக்கு சார்பான இணையத் தளங்களில் வெளியிடப்பட்டன என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக்கல்வியை மேம்படுத்தும் திட்டம் ஒன்றையும் பிரிட்டிஷ் கவுன்ஸில் ஊடாக நடைமுறைப் படுத்துவதற்கும் பிரிட்டிஷ் அரசு உதவி வழங்க உள்ளதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 15 ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படும். பின்னர் அவர்கள் மூலம் 150க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப் படும். வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் இருநாட்டு திட்ட நிதியத்தின் மூலம் இத் திட்டத்துக்கு உதவி வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-1)

## நீண்டகாலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விசாரணையின்போது இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு கடந்த ஒன்றரைவருடங்களாக பூஸா முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் நீர்கொழும்பு வாசியான ஜே.என். பிரான்ஸிஸ், சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் மூலமாக உயர்நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தாம் நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று உயர்நீதி மன்றத்துக்குத் தெரிவித்தார்.அத்துடன் பொலிஸார் தம்மைத் தொடர்ச்சியாக சித்திரவதை செய்து வருகின்றார்களென்றும் மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமாக நடத்தி வருகின்றார்கள் என்றும் அவர் உயர்நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இம்மனுவில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பூஸா தடுப்பு முகாம் பொறுப்பதிகாரி, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்ப திகாரி, பொலிஸ் மா அதிபர், கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச் சுச் செயலாளர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் கொள்கைத் திட்டம் ஒன்றை வகுக்குமாறும் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிக ளுடன் கலந்தாலோசனை நடத்துமாறும் சட்டமா அதிபருக்கு மனு மீதான பரிசீலனையின் முடிவில் நேற்று உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது. (அ-சி)

## அங்குலானைப் பகுதியில் நேற்று கிளைமோர்க் குண்டுகள் மீட்பு!

மொரட்டுவ, அங்குலானைப் பிரதேசத்தில் இரண்டு கிளேமோர் குண்டுகள் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகலே இந்த இரண்டு கிளைமோர்களும் கண்டெடுக்கப்பட்டன எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்தேகத்தின் பேரில் கைதாகி விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் தெரிவித்த தகவலை யடுத்தே இந்தக் கிளேமோர்க் குண்டுகள் மீட்கப்பட்டன எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## இலங்கை மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வீடியோக் காட்சி வெளியிடப் பட்டதிலிருந்து இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள் ளப்படவேண்டும் என்ற கோஷம் உலகம் எங்கும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்த நிலையில் இலங்கையில் நீண்ட காலமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அனுசரணைப் பணி வகித்தவர் என்ற வகையில், எரிக் சொல்ஹெய்ம் தற்போது வெளியிட்டிருக்கும் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நோர்வேயிலிருந்து வெளிவரும் 'ஆப்ரன் போஸ்ரன்' என்ற பத்திரிகைக்கு இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில், இறுதி ஆண்டுகளில் வகைதொகையின்றி மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். இந்தக் கொலைகள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளோ, நீதி விசாரணைகளோ நடத்தப்படவில்லை. இந்தக் கொலைகள் மற்றும் காணாமல் போதல்களின் பின்னணியில் ஸ்ரீலங்கா அரச இயந்திரத்தின் அலகுகள் இயங்கியமைக்கான திடமான பல ஆதாரங்கள் உள்ளன.

இறுதிக்கட்டப் போரின்போது வடக்குப் பகுதி முழுவதும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. எந்தவொரு உதவி நிறுவனமோ அன்றி சுயாதீன ஊடகவியலாளரோ அப்பகுதிக்கு அனுமதிக் கப்படவில்லை. அதனால் அரச படைகளுக்கு எதிராக எழுந்துள்ள போர்க்குற்ற தொடர்பான குற்றச்சாட்டுகளை உறுதி செய்ய முடியவில்லை.

இவ்வாறான புறச்சூழல்கள் ஐ.நாவினால் விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதை கடினமாக்கும் காரணிகளாக உள்ளன. அத்துடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் இதற்கான பெருத்த ஆதரவு ஏதும் நிலவவில்லை.

இருந்தபோதும் இந்த வீடியோ போன்ற ஆதாரங்கள் ஸ்ரீலங்கா மீதான போர்க்குற்ற விசாரணைகளுக்கான கோரிக்கையை வலுப்படுத்துகின்றன. - என்றார். (அ-சி)


1.6 GHz Processor
Intel Chip Mother Board
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
15"LCD (Monitor)
DVD Writer
UPS
38,000/=

2.2 GHz Processor
Intel Chip Mother Board(G31)
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
15"LCD (Monitor)
DVD Writer
UPS
43,000/=

2.5 GHz Processor (Dual Core)
Intel Chip Mother Board(G31)
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
17"LCD (Monitor)
DVD Writer
UPS
50,400/=

2.6 GHz Processor (Dual Core)
Intel Chip Mother Board(G31)
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
19"LCD (Monitor)
DVD Writer
UPS
51,900/=

2.8 GHz Processot (Core 2 Duo)
Intel Chip Mother Board(G31)
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
19"LCD (Monitor)
DVD Writer
UPS
56,800/=

2.93 GHz Processor (Core 2 Duo)
Intel Chip Mother Board
1GB DDR-2
250GB Hard Disk
ATX Casing
Key Board
Optical Mouse
24"LCD (Monitor)
DVD Writer
UPS
95,800/=

| | | | |
|---|---|---|---|
| Mother Board ASUS P5KPL | - 6400/= | Scanner (Hp 2410) | : 8000/= |
| VGA Card (512Mb) EN8400 GS | - 7200/= | Printer (Hp 1560) | : 4600/= |
| VGA Card (1GB) EN9400 GT | - 10500/= | Printer (T10) | : 5100/= |
| DVD Writer ASUS (Lightscrib) | - 4400/= | Power Supply | : 1500/= |
| TV Card My Cinema P7131 | - 4700/= | Head Phone | : 800/= |
| LCD LG (19") | - 16250/= | UPS (DCP) | : 4150/= |
| LCD View Sonic (17") | - 17000/- | Creative 5 in 1 | : 7250/= |

உலகத்தரம் வாய்ந்த ASUS கணனி உதிரிப் பாகங்களை யாழ் மண்ணில் வழங்கும் ஏக விநியோகஸ்தர்கள்..

ASUS CORNER

108, Luxan Plaza, Navalar Road, Jaffna. T.P-0212221048



Jaffna College
Certificate Course in English

Batch I : Week day Batch 8.30 - 12.30
Batch II : Week end Batch 8.00 - 12.00
Course Commencing on
07.09.2009 8.30 a.m. Week day batch
05.09.2009 8.00 a.m. Week end batch

* ஆற்றலுக்கேற்ப குழுக்கள் தெரிவு செய்யப்படும்.
* வகுப்புக்கள்வார மற்றும்வார இறுதி நாள்களில் நடைபெறும்.

Improve your Sinhalese language Skill

Target group : School leavers and Working adults
Duration : 4 Months
Lectures time : Week end - batch I
Week days - batch II
Classes Commencing on 5th sep 2009

Jaffna College
Undergraduate Dept.
464, hospital Road,
Jaffna.



SHAMROCK
கச்சேரிமேட்டை, யாழ்.
A/L 2011 - இரசாயனவியல்
Sat, Sun 5 P.m
PHY
Mon, Thu, 5.30 p.m
PHY - B.Sc.
* Spoken English
* SINHALA
* A/L ENGLISH



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட்,யாழ்.
பல மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய பிரிவு
கணக்கீடு
திரு. பகீரதன்
★ கர்ப்பனி
A/L 2010 7 to 8 a.m
★ தொங்கல் க/கு
A/L 2011 10-11 a.m
ஆரம்பம் 29.08.2009
(இம்மாதக் கட்டணம் இல்லை)



ASP ENTERPRISES



ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Reconditioned சைக்கிள்கள் விற்பனைக்குண்டு
ஆண்கள்,பெண்களுக்கான கியர்,சாதாரண சைக்கிள்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்
மிகவும் தரமான சைக்கிள்கள் மிகக்குறைந்த விலையில் விற்பனையாகின்றன
அதிரடி சலுகை - 8500 ரூபாயிலிருந்து விற்பனையாகின்றது

ASP ENTERPRISES
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0602001585, 0776079352



சாவகச்சேரியில் முதன் முறையாக

நவீன கணனி மயப்படுத்தப்பட்ட மருத்துவ ஆய்வு கூடத்தில் சகல விதமான இரத்த, சல பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

LAVA LABORATORIES
அம்பிகா பார்மஸி,
கண்டி வீதி, சாவகச்சேரி.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூரணபாக்கியம் சங்கர்

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நகர், வண்ணார் பண்ணையை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி பூரண பாக்கியம் சங்கர் நேற்று (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுழிபுரம் இந்திரராஜா சங்கரின் மனைவியும் அறிவழகன், அறிவுச்செல்வன் ஆகியோரின் தாயாரும் தயானி, கலைமகள் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*120, அரசடி வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம். தொ.பே. 222 9949* இ.சங்கர் (கணவன்).

### திருமதி செல்லத்துரை பாக்கியம்



திருமதி செல்லத்துரை பாக்கியம் (28.08.2009) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை செல்லத்துரை (M.S.O யாழ்.தபால் கந்தோர்) அன்பு மனைவியும் முன்னாள் கிராம உத்தியோகத்தர் S.T.சகுந்தலாதேவி, காலஞ்சென்ற கிராம உத்தியோகத்தர் S.T.சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2009) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.30 மணியளவில் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/3, மருதடி லேன், தகவல்: செ.தி சகுந்தலாதேவி - மகள்.
யாழ்ப்பாணம். [முன்னாள் கிராம உத்தியோகத்தர் J/88 புதியசோனக தெரு].

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org